19

DUTIES OF A HUSBAND

OR

Status of Married Women

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1-JUL 1925
MADRAS

BY

S. S. ARUNAGIRINATHAN

PUBLISHER

T. RAJAGOPAUL MUDALIAR

9, MINT STREET, MADRAS

rved]

[Price As. 4

R34
N25
177584

மாமிகளின் துயரம்

அல்லது

மருமக்களின் கொண்டாட்டம்

இஃதோர் அரிய தமிழ் புத்தகம். தற்காலத்தில் கல்வி கேள்வி பெற்று நாகரீகமுள்ள மருமக்கள் மாமிகளால் படுத்தப்படும் பாட்டைச் சகியாமல் அவர்கள் நடக்கும் நட[illegible]கைகளும் அதனால் மாமிகள் துக்கமடைந்து தங்கள் [illegible] மித்திரர்களுக்குத் தங்கள் துய[illegible] தெரிவிக்கும் [illegible]மும் அநேக நாவல்களெழுதுவதில் பிரக்கியாதிபெ[illegible] அ. ரா. மாதவராய முதலியாரவர்களால் எழுதப்பட்ட[illegible] எல்லா ஸ்திரீகளும் வாசிக்கத்தகுந்தது. வேண்டியவர்[illegible] அடியிற்கண்ட விலாசத்திற்கு மூன்று அணா ஸ்டா[illegible] அனுப்பினால் 1 புஸ்தகம் அனுப்பப்படும்.

காதலற்ற கலியாணம்

அல்லது

பெண் வீட்டாரைக் கொள்ளையடித்தல்

இனி கலியாணம் செய்துகொள்ளும் ஆண், பெண்களுக்கும் மற்றவர்களுக்கும் முக்கியமாய் தேவையுள்ளது.

விலை அணா 1.

அடங்காச் சிரிப்பு

நண்பர்களே! நீங்கள் ஓயாமல் சிரித்துக்கொண்டிருக்க வேண்டுமானால் "மலையை விழுங்கிய மகாதேவன்" எனனும் கதையை வாங்கிப் படியுங்கள். இதன் விலை அணா 6.

தி. இராஜகோபால் முதலியார்,

259, தங்கசாலை தெரு,

[illegible]மின்ட் பில்டிங் போஸ்டு,

மதராஸ்.

உ

முருகவேள் துணை

கணவனின் கடமை

அல்லது

பெண்களின் நிலைமை

இஃது

எஸ். எஸ். அருணகிரிநாதர்

எழுதியது

வெளியிட்டவர்:

தி. இராஜகோபால் முதலியார்

259, தங்கசாலை வீதி

சென்னை

ரிஜிஸ்தர் செய்தது]

[இதன் விலை அணா 4

எமகாதகன் அல்லது **மாயாசித்தன்**

ஒரு வேடிக்கையும், தந்திரமுள்ள இனிய கதை

விலை அணா 0—8—0

கண்ணைக்கட்டிக் காலங்கழிக்கும்

மிஸ்டர் திண்ணை தூங்கி தடிராமன்

இதுவும் ஒரு விநோதக் கதை

விலை அணா 0—6—0

தி. இராஜகோபால் முதலியார்

259, தங்கசாலை தெரு,

மதராஸ்.

முன்னுரை

சில மாதங்களுக்கு முன் என்னால் எழுதப்பட்டு வெளி வந்த மனைவியின் கடமை என்னும் புத்தகத்தை வாசித்த சகோதர சகோதரிகள், நேரிலும் கடித மூலமாகவும் அப் புத்தகத்தைப் பற்றித் தங்கள் அபிப்பிராயத்தை ஆர்வத் துடன் தெரிவித்து வந்தனர். இவ்வாறு அவர்கள் என் மீது கொண்டுள்ள சகோதர பாவ அன்பிற்காக நான் மகிழ் கின்றேன். இவ்வாறு நேரிலும், கடித மூலமாகவும் எனக் குத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்த சகோதரிகளிற் பலர்—கல்வி யறிவுடையவர்கள்—'மனைவியின் கடமை' என்னும் ஒரு புத்தகம் இக்காலத்திற்கு அவசியமா யிருப் பதுபோலவே, 'கணவனின் கடமை' என்னும் ஒரு புஸ்தகமும் இக்காலத்திற்கு அவசியமா யிருக்கின்றது. ஆகை யால் தாங்கள் 'கணவனின் கடமை' என்னும் பெய ரமைத்து ஒரு புஸ்தகம் எழுதி வெளியிட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டனர். அவர்களுடைய வேண்டுகோள் நியாயமானதென்று எனக்குத் தோன்றியபடியால் உடனே நான் மனமகிழ்ச்சியுடன் இப்புத்தகத்தை எழுதினேன். இதைச் சகோதரர்கள் படித்து மகிழ்வார்களென்னும் நம் பிக்கை எனக்குண்டு.

இந்நூலை அன்புடன் ஏற்றுப் பிரசுரித்த என் நண்பர் ஸ்ரீமான் தி. இராஜகோபால் முதலியா ரவர்கட்கும், என் னால் எழுதப்படும் நூல்களையெல்லாம் சலியாது வாங்கிப் படித்து மகிழும் சகோதர சகோதரிகட்டும் என் வந்தனம் உரியதாகும்.

எஸ். எஸ். அருணகிரிநாதன்.

புதியதாக வெளிவந்த நாவல்

அங்கயற்கண்ணி

அல்லது

அன்புள்ள மங்கை

இது ஓர் துப்பறியும் அபூர்வமான செந்தமிழ் நாவல். ஆரம்பம் முதல் முடிவுவரையில் எவ்விதவேலை இருந்த போதிலும் படிக்கத் துவக்கியவர்கள், முடிகிற வரையில் இந்த புஸ்தகத்தை கீழே விடமாட்டார்களென்று திடமாகச் சொல்லலாம். இந்த நாவலில் உயர் குலத்தில் பிறந்தவனும், அதிக செல்வவந்தனும், படிப்பில் மிக்க தேர்ச்சி உள்ளவனும், பல இடங்களில் மேன்மக்கள் சாவகாசமுள்ளவனும், நன்நடக்கை உள்ளவனுமாகிய கதா நாயகனானவன் இக்கதையில் கதாநாயகியாய் வரும் அழகில் சிறந்த அங்கையற்கண்ணியின் மீது ஆசை கொள்வதும், அவளையே விவாகம் புரியவேண்டுமென்ற எண்ணத்தினால் அவன் செய்யும் கொடூரமான கொலையும் பயங்கரமான விஷயங்களும் அதை வேறு ஒருவன் மீது பழிசுமத்துவதும், சமயத்துக்கு எற்றவாறு அவனுடைய திறமையும் படிப்பவர்களுக்கு ஊக்கத்தைத் தரும். காதாநாயகியாகிய அங்கயற்கண்ணியின் கற்பை வாசிக்க வாசிக்க நமது சகோதரர் சகோதரிகளும், மிக்க ஆச்சரியத்தையும், நன்நடக்கையையும் உண்டு பண்ணும். இந்த நாவலின் சிறைப்பை அதிகமாய் எழுதுவதை சுருக்கி காட்டி இருக்கிறோம். இது 350 பக்கமடங்கியுள்ளது. சுத்தமான பெரு அச்சில் பதிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 1-12-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

தி. இராஜகோபால் முதலியார்,

259, தங்கசாலை தெரு,

சென்னை.

உ

முருகவேள் துணை

கணவனின் கடமை

அல்லது

பெண்களின் நிலைமை

'கணவனின் கடமை' என்பது யாது? 'கணவனின் கடமை என்பது இதுதான்' என்று எடுத்துக் கூற முடியாதவர்களே நமது நாட்டில் குவிந்திருக்கின்றனர். கணவனுடைய உண்மையான கடமையை நமது நாட்டு ஆண்மக்கள் வெகு காலத்திற்கு முன்னரே மறந்துவிட்டனர். அந்தோ, உலகத்திலுள்ள மற்ற நாடுகளில் வசிக்கும் ஆண்மக்களோடு நமது நாட்டில் வசிக்கும் ஆண்மக்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமக்குப் பரிதாபம் உண்டாகின்றது. முற்காலத்தில் கணவன் என்னும் பெயருக்குரிய ஒருவன் எவ்வாறு நடந்துகொண்டானென்பதையும், இக்காலத்திய கணவர்கள் எவ்வாறு நடந்துகொள்ளுகின்றார்களென்பதையும் நாம் ஆலோசித்துப் பார்ப்போமாயின் நமக்கு யாவும் நன்குவிளங்கும். இக்காலத்தில் 'மனைவிமார்' என்று சொல்வதற்கு இருக்கவேண்டிய இலட்சணங்கள் ஸ்திரீகள் அநேகரிடத்தில் காணப்படவில்லை. அது போன்றே 'கணவன்' என்று சொல்வதற்குரிய இலட்

சணங்கள், ஆண்மக்கள் பெரும்பாலாரிடத்திற் காணப்பட வில்லை. உண்மையைச் சொல்லவேண்டுமானால், இக்காலத் தில் நமது நாட்டில் உள்ளவர்களிற் பெரும்பாலார் விவாக மானவர்கள்—தங்களைக் 'கணவர்கள்' என்று சொல்லிக் கொள்ளுவதற்கே யோக்கியதை யற்றவர்களா யிருக்கின் றனர். தங்களைக் 'கணவர்கள்' என்று சொல்லிக் கொள்வ தற்கு இருக்கவேண்டிய யோக்கியதையுடன் கூடிய ஆண் மக்கள், படித்தவர்களிற்கூட, காண்பதற்கு அருமையா யிருக்கின்றனர். 'கணவன் என்றால் என்ன?' என்று நாம் கேட்போமாயின், 'கலியாணம் செய்துகொண்டவன் கண வன்' என்றே எல்லோரும் பொருள்கூறுவர்! கலியாணம் செய்துகொண்டவர்க ளெல்லோரும் கணவர்தாமோ? வேறென்ன? அவ்வாறன்று. விவாகஞ் செய்துகொண்ட ஒருவன், தன்னுடைய பொறுப்பு இன்னதென்று அறிந்து, அறிந்தவழியில் நடப்பானாயின், அவனே கணவனென்று அழைக்கப்படுதற் குரியவனாவான். 'கணவனின் கடமை என்றால் என்ன?' என்று நாம் கேட்போமாயின், 'ஒரு பெண்ணை மணந்துகொண்டு மக்களைப்பெறுவதே கணவ னின் கடமையாகும்' என்று கூற முன்வருகிறவர்களும் இருக்கலாம். அந்தோ, அவர்களின் அறியாமைக்கு என் செய்வோம்? சிலர், 'பலவழிகளிலும் பொருளைத்தேடி, தம் மனைவிமக்களைக் காப்பதே கணவனின் கடமையாகும்' என்று கூறலாம்; பலர் 'மனைவி விரும்புகிறபடி நடந்து அவளைமகிழ் விப்பதே கணவனின் கடமையாகும்' என்னலாம். சிலர், 'பல வகையிலும் மனைவியினிடத்தில் அன்புசெலுத்துவதே கணவ னின் கடமையாம்' என்று சொல்லலாம். இவ்வாறெல்லாம் கூறுவது சரியோ? முறையற்றவழிகளில் பொருள்தேடி தன் மனைவிமக்களைக் காப்பாற்றுவது கணவனின் கடமையாகுமா? மனைவி நியாயமுள்ள விஷயத்தையும் விரும்பலாம்; நியாய

மில்லாத விஷயத்தையும் விரும்பலாம். ஆகையால் அவள் எதை விரும்பினுலும் அவள் விருப்பப்படி நடந்து அவளை மகிழ்விப்பது கணவனின் கடமையாகுமா? உலகத்தார் ஒப்புக் கொள்ளாத ஒரு விஷயத்தை மனைவி விரும்புவாளாயின், அவள் விருப்பத்திற் குட்பட்டு அவள் கணவன் அவள் விரும்பும் விஷயத்தில் அவளுக்குத் துணையாக நிற்பது தரு மந்தானே? அது கணவனின் கடமையாகுமா? ஒருபோது மாகாது.

நமது நாட்டில் விவாகம் செய்துகொண்ட ஆண்மக் களிற் பெரும்பாலாருக்குத் தங்களுடைய கடமை இன்ன தென்றே தெரியாது என்று கூறலாம். அவர்கள் படித் தவர்களாயினும் சரியே; படியாதவர்களாயினும் சரியே. அவர்கள் தங்கள் கடமை இன்ன தென்று உணராத வரையில் எந்தத் தேசாபிமானியாலும் நமது தேசத்தை முன்னுக்குக் கொண்டுவர முடியாது. நான் உண்மையைக் கூறுகிறேன். என்னைப்பற்றி யார் எது கூறினுலும் கூறுக. நம் நாட்டிலுள்ளவர்கள் பழங்கதைகளைப் பேசி, காலங்கழிப் பதில் கெட்டிக்காரர்கள் என்பதிற் சந்தேகமில்லை. வீண் பெருமை பேசிக் காலத்தைக் கழிப்பதில் நமது நாட்டார் வேறு எந்நாட்டாருக்கும் பின் வாங்கமாட்டார்க ளென்பது அறிவுடையார் அறிந்த விஷயமேயாம்.

நாம் எவ்வகையிலும் நமக்குச் சமத்துவமுள்ள நமது மனைவியர்களைத் தாழ்ந்தவர்களென்று நினைத்து அதற் கேற்றபடி அவர்களை நடத்தலானேம். நாம் நமது மனைவியர் களைக் கேவலமாக மதிக்கின்றோம்.

நாம்—கணவர்களாகிய நாம்—நமது கடமை என்ன வென்று எண்ணிப் பார்க்கவேண்டும்; உண்மையை அறிய வேண்டும்; அறிந்து அறிந்தபடி நடக்கவேண்டும். தற்காலத் தில் எவ்வகையிலும் நம்மைவிட எத்தனையோ பங்கு அதிக

மாக முன்னேற்ற மடைந்துள்ள மேல்நாட்டாரைப் பாருங்கள்! அவர்களைப்பார்த்தாவது உணர்ச்சி பெறுங்கள்! 'நாம் பிறரைப்பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை; நமக்கு யாவுந்தெரியும்' என்று கூறும் மூடர்களின் வார்த்தைகளை நம்பி மோசம்போகாதீர்கள். நம்மிடமிருந்து மேல்நாட்டார் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் அநேகம் உண்டென்பது உண்மையாயினும், அதுபோன்றே மேல்நாட்டாரிடமிருந்தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. இதை யறிந்துகொள்ளாமல் வீணுக வாய்மதங்கொண்டு பேசித் திரியாதீர்கள். இன்னும் வெகுகாலம்வரையில் அறியாமையாகிய இருட்டில் இருந்து துன்பப்பட உங்களுக்கு விருப்பமானுல், இப்போது இருக்கும் நிலையிலேயே நீங்கள் இருக்கலாம். அவ்வாறு நீங்கள் இருட்டில் இருந்து துன்பப்பட இஷ்டப்படுகிறீர்களா? அவ்வாறு இஷ்டப்படுகிறவர்களும் இருப்பார்களா? இருக்கமாட்டார்கள். நாம் வெளிநாட்டாரிடம் நம்மைப்பற்றி எவ்வளவு தூரம் பெருமை பாராட்டிக்கொண்டாலும் நமது இரகசியம் நமக்குத் தெரிந்துதானே, இருக்கின்றது! பழுதடைந்த சுவற்றை இடித்துத்தள்ளிப் புதுச்சுவர் எழுப்ப வேண்டுமே யல்லது அச்சுவற்றை அப்படியே வைத்து 'அதற்கு மேல்பூச்சு' அழகாகப்பூசி விடுவதனுல் நன்மையுண்டாகாது; அவ்வாறு செய்வது ஆபத்தைத் தடுக்கும் வழியுமாகாது. ஆகையால், நாம் நமக்குள்ளிருக்கும் ஒழுங்கீனங்களை நமது படாடோபமான வார்த்தைகளால் மறைத்து ஆடம்பரமாக ஆடைகளை யணிந்து நடிப்பது கேவலமேயாகும். 'வெளிநாட்டாரைப் பார்த்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை. இப்போது வெளிநாட்டார் தெரிந்துகொண்டிருக்கும் விஷயங்களை யெல்லாம் நமது பெரியோர்கள் தெரிந்துகொண் டிருந்தார்கள். நம்

முடைய சாஸ்திரங்களைத்தான் ஜர்மனியர்களும், ஆங்கிலேயர்களும் கொண்டுபோய் வைத்துக்கொண்டு அநேக அருமையான விஷயங்களைக் கண்டுபிடித்துக்கொண் டிருக்கின்றனர்' என்று நம்மில் அநேகர் சொல்லிக் கொள்ளுகின்றனர். இவ்வாறு சொல்லிக் கொள்ளுகிறவர்கள் சோம்பேறிகளும், பொறாமைக்குணம் உடையவர்களுமே யாவர் என்பதில் தடையில்லை. ஜர்மனியர்களும், ஆங்கிலேயர்களும் நம்முடைய சாஸ்திரங்களைத் துணைகொண்டு அநேகம் அரிய பெரிய விஷயங்களைக் கண்டுபிடிக்கட்டு மென்று நாம் தயை கூர்ந்து மௌனமா யிருக்கின்றனம்போலும்! இந்திய நாட்டுச் சகோதரர்களே! வீண்பெருமை வேண்டாம்; வீண் கௌரவம் வேண்டாம். நீங்கள், நமது முன்னோரின் பெருமையைப்பற்றிப் பேசி வீணாகக் காலத்தைப் போக்கி விடாதீர்கள். நமது முன்னோர்கள் பெருமையாகத்தான் வாழ்ந்தார்கள். அவர்கள் வாழவில்லை என்று அந்நிய நாட்டிலுள்ளவர்களில்கூட அறிவுடையவரா யிருப்போர் எவரும் சொல்ல முன் வரமாட்டார்கள். நமது முன்னோர்கள் வாழ்ந்தது இருக்கட்டும். இப்போது நம்முடையநிலைமையை எண்ணிப் பாருங்கள். நாம் பல வகையிலும் பிற்போக்குடையவர்களா யிருக்கின்றோம். பஞ்சமும், பிணியும் நம்மை வாட்டுகின்றன. கஞ்சியோ ராகவா? என்று நம்மிற் பலர் அலைகின்றனர். அவர்கள் அலைவதை அணுவளவும் அறியாது நம்மில் அநேகந் தனவந்தர்கள், 'இவ்வுலக சுகம் தங்களுடையது' என்றெண்ணி சுந்தரமான மாளிகைகளில் வசித்துப் பொழுது போக்குகின்றனர். நமது தேசம் வர வர எவ்வாறு மாறுகின்ற தென்பதைப்பற்றிப் பெரும்பாலார் கவனிப்பதே யில்லை. நமது நாட்டு ஆண் மக்களில் அநேகர் அறியாமையில் முழுகிக் கிடக்கின்றனர். நமது பெண்மணிகளாகிய கண்மணிகளைப்பற்றி யாதும் சொல்ல

வேண்டியதேயில்லை. அவர்கள், 'எப்படிப் புடவையைக் கட்டிக்கொண்டால் காண்போர் மயங்குவர்? எப்படித் தலையை வாரி வாகு எடுத்து முடிவது? இரவிக்கை-ஜாக்கெட் இவைகளில் எதை எவ்வாறு தைத்து எப்படி அணிந்து கொள்ளலாம்?' என்பதில் அதிகக் கருத்துடையவர்களா யிருக்கின்றனர். இத்தகைய மூட மயக்கத்தில் அகப்பட்டுள்ள பெண் மணிகளின் புருஷர்களோ, 'குடுமி வைத்துக் கொள்ளுவதா? கிராப் செய்து கொள்ளுவதா? தனிமையாக மனைவியோடு வசிக்கலாமா? எப்படி நடந்து கொண்டால் தங்களை நாகரீக முடையவர்களென்று காண்போர் சொல்லுவார்கள்?' என்பனபோன்ற விஷயங்களில் கருத்தைச் செலுத்திக் காலங் கழிக்கின்றனர். அதிக மென்ன! இத்தகைய அறிவிலிகளால் இவ்வுலகில் அநேகந்தீமைகள் உண்டாகின்றன. அத்தீமைகளை எவ்வாறு ஒழிப்பது? தன் மனைவி, தன்னுடைய கடமையைச் சரிவரச் செய்யவேண்டுமென்று கணவன் விரும்புவதைப்போலவே மனைவியும் தன் கணவன் தன்னுடைய கடமையைச் சரிவரச் செய்யவேண்டும் என்று விரும்புவாளல்லவா? ஒவ்வொரு புருஷனும் தன்கடமையைச் சரிவரச் செய்வானாயின் நமது நாடு முன்னேற்றமடையும் என்பது திண்ணம்! அஃதெப்படி? என்? ஒருகுடும்பத்தில் உள்ள பலரும் தங்கள் கடமையை அறிந்து அதற்கேற்றவாறு நடப்பார்களாயின் அக்குடும்பம் முன்னேற்ற மடையும் என்பது திண்ணம். அவ்வாறு பல குடும்பங்கள் முன்னேற்றமடையுமானால், ஒரு கிராமம் முன்னேற்ற மடையும்; பல கிராமங்கள் முன்னேற்ற மடையுமானால் ஒரு ஜில்லாவும், பல ஜில்லாக்கள் முன்னேற்ற மடையுமானால் ஓர் இராஜதானியும், பல இராஜதானிகள் முன்னேற்ற மடையுமானால் ஒரு தேசமும் தடையின்றி முன்னேற்ற மடைகின்றன. ஆகவே ஒரு தேசம் முன்னேற்ற மடையவேண்டுமானால் ஒவ்வொரு

குடும்பத்திலுமுள்ள ஒவ்வொருவனும் தன் கடமையை யறிந்து நடக்கவேண்டுமென்று தெரிகிறதல்லவா ? எந்தத் தேசத்தில் ஸ்திரீகளும், புருஷர்களும் தங்கள் கடமையை அறிந்து அதற்கேற்ற வழியில் நடக்கின்றார்களோ அந்தத் தேசம் முன்னேற்ற மடையுமென்பது திண்ணம். எந்தத் தேசத்தில் உள்ள ஸ்திரீகளும், புருஷர்களும் தத்தம் கடமைகளை அறியவில்லையோ அந்தத் தேசம் முன்னேற்றமடையாதென்று சொல்லவும் வேண்டுமோ ?

விவாகமான ஆண்மக்களே எங் நாட்டிலும் எல்லோராலும் கணவர்களென்று அழைக்கப்படுகின்றனர். விவாகம் செய்து கொண்டவர்கள் எல்லோரும் கணவர்களென்னும் பெயருக்கு உரிமையவர்கள்தாமா? இல்லை, இல்லை. தன் கடமையை அறிந்து நடப்பவனே கணவனாவான். அறிவற்றவர்கள் கலியாணம் செய்துகொண்டால் அவர்கள் தங்கள் கடமையை அறிந்து எவருக்கும் ஏற்ற விதமாக நடப்பார்களா? ஒருவன் படித்துவிட்டதனாலும், தகுந்த வயதை யடைந்துவிட்டதனாலும் கலியாணம் செய்து கொள்ளுவதற்கு அருகனுவானு? ஆகான். ஏன்? படித்தவனிலும் அறிவற்றவன் உண்டு; வயதானவனிலும் மூடன் இருக்கின்றான். ஆகையால் அறிவுள்ளவனே கணவன் என்னும் பெயரை வகிப்பதற்கு ஏற்றவனுவான். மற்றவன் விவாகத்தை மறந்து மௌனமா யிருப்பதே உலகம் முன்னேற்ற மடைவதற்கு ஏற்ற வழியாகும்.

தற்காலத்தில் நமது இந்திய நாட்டில், நடக்குங் கலியாணங்களின் சீர் கேட்டைப்பற்றி எவராலும் எழுதமுடியாது. பெற்றோர்கள் தங்கள் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் எப்படியேனும் கலியாணம் செய்துவிட முயற்சிக்கின்றனர். அவர்கள் கவனிப்பதெல்லாம் 'மருமகள் பணக்காரன் பெண்ணு யிருக்கவேண்டும் ; மருமகன் பணக்காரனு

யிருக்கவேண்டும்' என்பதே யாம். 'பணம் இருந்து விட்டால் யாவும் சரிப்பட்டு விடும்' என்று கூறும் மூடத் தாய் தந்தையர்கள் எத்தனையோ பெயர் நம் நாட்டில் இருக் கின்றனர். பணம் இருந்துவிட்டால் யாவும் எப்படிச் சரிப் பட்டு விடும்? பணம் இருந்துவிட்டால் மருமகனும், மருமக ளும் தீய நடத்தை யுடையவர்களா யிருந்தபோதிலும் அவர் களின் தீய நடத்தை வெளியாகா தென்பது அவர்க ளுடைய எண்ணமோ? அப்படியாயின் அவ்வெண்ணம் தவறாகும். தீய நடத்தை எப்பொழுதாவது வெளியாகா மற் போகாது. பணமுடையவர்களின் எதிரில் அவர்கள் செய்யும் கெட்ட காரியங்களை எடுத்துக் கூற பெரும்பாலும் எவரும் முன்வர மாட்டார்கள். ஆனால், உலகத்தார் அவர்கள் இல்லாதவிடங்களில் அவர்களுடைய துர்நடத்தை யைப் பற்றிப் பேசாமல் இருக்கமாட்டார்கள். நம் எதிரில் ஒருவன் நம்மைப் புகழ்ந்து பேசுவது விசேஷமாகாது. நாம் இல்லாத விடத்திலும் நம்மைப்பற்றிப் பிறர் புகழ்ந்து பேசும்படியாக நாம் நடந்துகொள்ள வேண்டும். நாம் இல் லாத விடத்தில் நம்மைப் புகழ்ந்து பேசுவதே சிறந்த தாகும். நம்மைப் பிறர் புகழ்ந்து பேசவேண்டுமானல் நாம் செய்கின்ற காரியம் சிறந்ததா யிருக்கவேண்டும். 'எவர் எப்படிக் கூறினல் என்ன? எவர் நடத்தை எவ்வாறு இருந் தால் என்ன? பணமே பிரதானம்' என்று எண்ணி மகிழ் கின்ற மூடர்களைப்பற்றி நாம் யாதும் கூற முன்வரவில்லை.

தாய் தந்தையர்கள் தங்கள் மருமகனும், மருமகளும் அறிவுடையவர்களா யிருக்கவேண்டு மென்பதையே முக் கிய நோக்கமாகக் கொள்ளவேண்டும். மற்ற விஷயங்களை அதற்குப் பின்னல் கவனிக்கவேண்டும். அறிவுடைய மரு மகனையும், மருமகளையும் தேடிக்கொள்ளும் தாய் தந்தையர் களே புத்திசாலிகளும், புண்ணிய சீலர்களுமாவார்கள்!

புத்திசாலிகளான மருமகளும், மருமகனுமே கணவன், மனைவி என்னும் பெயருக் குரியவர்களாவார்கள். அவர்களுக்காகக் 'கணவனின் கடைமை' என்றும், 'மனைவியின் கடமை' என்றும் பெயரமைத்துப் புத்தகங்கள் எழுத வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்குப் பிறர் சொல்லாமலே தங்கள் கடமை இன்னதென்று நன்றாகத் தெரியும்.

தனவந்தர் வீட்டுப் பிள்ளைகளா யிருந்தாலும் அவர்கள் நல்லறிவும், நல்லொழுக்கமும் உடையவர்களாய்த் தமக்கிருக்கும் பொருளைக் காப்பாற்றி விருத்தி செய்யக் கூடியவர்களாய் இருப்பார்களானால் அப்போதுதான் அவர்களுக்கு விவாகம் செய்து வைக்கவேண்டும். அவ்வாறின்றித் திரண்ட செல்வத்தை மட்டும் பெரிதென்றெண்ணி அவர்களுக்கு விவாகம் செய்து வைப்பது பிசகாகும். ஏழைகளா யிருப்போர் தங்கள் பிள்ளைகள் அறிவுடையவர்களாய்த் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளுந் திறமையுடையவர்களாய் இருப்பார்களானால் அப்போது வேண்டுமானால் அவர்களுக்கு விவாகம் செய்து வைக்கலாம். ஏழைகளாயிருப்போர் எப்படியோ பொய் முதலியவைகளைக் கூறித் தம் பிள்ளைகளுக்கு விவாகம் செய்து வைத்து விடுதல் கொடுமையினும் கொடுமையாகும். அதனால் விளையும் துன்பத்திற்கு அளவில்லை. தாய் தந்தையர் தம் மக்களுக்கு ஏற்ற பெண்ணையும், பிள்ளையையுமே தேடி மணம்செய்து வைக்கவேண்டும். நாற்பது வயது சென்று நரைத்தவனுக்குப் பத்து வயதுடைய பெண்ணையும், பருவமடைந்து பல மாதங்களைக் கடந்த பெண்ணுக்குப் பதினாறு வயது பையனையும் மணஞ்செய்து வைப்பது மதியீனமாகும். அழகும், புத்தியும் உள்ள பிள்ளைக்குப் பணவாசை கொண்டோ வேறு எக்காரணங் கருதியோ அழகு அறிவு முதலியன இல்லாத பெண்ணையும், அறிவும்

அழகும் உடைய பெண்ணுக்கு மூடனும், குரூபியுமான பிள்ளையையும் தேடி மணம் செய்து வைத்தல் தகாது. அப்படிச் செய்தால் கணவனும் மனைவியும் பெரும்பாலும் தம்முள் ஒற்றுமையின்றியே இருப்பர் என்பது உண்மை.

விவாகமான பின்னர் கணவன் எவ்வகையிலும் மனைவி தனக்குச் சமமானவளென்று எண்ணி அவளைக் கௌரவமாகவே நடத்திவரவேண்டும். எந்த வீட்டில் மனைவி சந்தோஷமுடையவளா யிருக்கவில்லையோ அந்த வீட்டில் இலட்சுமியானவள் வாசம் செய்யமாட்டாளென்று பெரியோர்கள் கூறுகின்றனர். நமது நாட்டில் முற்காலத்தில் இருந்த பெரியோர்கள்—ஆயிரம் வருடங்களுக்கு முன்னிருந்த நந்தமிழ் மக்கள்–பெண்களுக்கு, சமஉரிமை கொடுத்திருந்தனர். காலஞ் செல்லச் செல்ல, வடக்கிலிருந்து வந்தவர்களுடைய காற்று நம்மீது படப்பட அவர்களுடைய வழக்க வொழுக்கங்களிற் பல நம்மிடம் குடிபுகுந்து விட்டன. அவ்வாறு நம்மிடம் குடிபுகுந்த விஷயங்களில் நமது பெண்களை நாம் அடிமைகளாக வெண்ணி, பிள்ளைபெறும் இயந்திரங்களாக அவர்களை மதித்துவருவதும் ஒன்றாகும். கணவன், தன்னைத் தன் மனைவி மதிக்க வேண்டுமென்று நினைப்பதுபோலவே தானும் தன் மனைவியை மதித்து நடக்க வேண்டுமென்று நினைக்கவேண்டும். 'ஆண்பிள்ளைகள் எப்படியிருந்தால் என்ன, பெண்கள்தாம் ஒழுக்கமுடையவர்களாயிருக்கவேண்டும்' என்று அநேகர் கூறுவது உண்டு. அவர்கள் அவ்வாறு கூறுவது அறியாமையினால் என்பது திண்ணம். மனைவி கற்புடையவளா யிருக்கவேண்டுமென்று விரும்புகிற கணவன், தானும் பரஸ்திரீ கமனம் செய்யாதவனா யிருக்கவேண்டியது அவசியமாகின்றது. அவ்வாறு ஒழுங்குடையவர்களா யிருக்கும் ஆண்மக்களே சிறந்தவர்களாவர். பரஸ்திரீ கமனம் செய்யாத ஆண்மகன்

மனிதர்களில் தேவனுவான் என்பது நிச்சயம். ஸ்ரீ இராம பிரானுக்குப் பல நற்குணங்கள் பொருந்தியிருந்தன. அவை களில் ஒன்று அவர் ஏகபத்தினிவிரதராய் இருந்ததாம். தங் கள் மனைவிமார்கள் கற்புடையவர்களா யிருக்கவேண்டு மென்று கருதுகிற கணவர்களில் பெரும்பான்மையோர் பல வகையிலும் ஒழுங்கீனர்களா யிருக்கின்றனர். அழகிற் சிறந்த மனைவியர்களை அகத்திலிருத்திப் பரத்தையரை நாடிச் செல்லும் பாவிகள் எத்தனைபேர்! தாசிவீடே தன்வீடாகக் கருதித் திரியும் தறிதலைகள் எத்தனைபேர்! கண்வலை வீசி உயிர்கொடுபோகும் கணிகையரை உயர்வாக மதித்து வேள் வித்தீயின்முன் மணஞ்செய்துகொண்ட மனையாட்டியை உண்ண உணவுக்கும் வழியின்றி அலையவிடுகின்ற ஊர்சுற்றி கள் எத்தனைபேர்! காதன் மனையாளைக் கஞ்சிக்கலையவிட்டுக் கணிகையரோடு காசியாத்திரைபோகும் காமுகர்கள் எத்தனை பேர்! இத்தகைய மனிதர்கள் இருக்கும்வரையில் நமது நாடு முன்னேற்ற மடையுமா? தன்மனையாளைத் தனிமை யிருத்திப் பிறர்மனைக்கேகும் பேதையும் பதரே என்று கூறியது மிகவும் உண்மையேயாம். இத்தகைய பதர்கள் பாவமாகிய காற்றில் அகப்பட்டுக்கொண்டு அல்லற்பட நேருமென்பதை அறியாமலிருக்கின்றனபோலும்! அந்தோ கொடுமை! கொடுமை! இத்தகைய அறிவற்ற கணவர்களை மணந்துகொண்ட பெண்களின்கதி எப்படியாகும்? சொல் லவும் வேண்டுமா? ஸ்திரீகள் கெட்டுப்போவதற்கும், கெடா மல் இருப்பதற்கும் அவர்களுடைய கணவர்களே காரண ராவர் என்பது பெரும்பாலும் உண்மைதான். ஒழுங்கீன மான வழியில் தங்கள் இஷ்டம்போல் நடக்கும் கணவர் களிடம் அவர்களுடைய மனைவிமார் எவ்வாறு காலந்தள்ளு வார்கள்? சகோதரர்களே, நாம் முற்றிலும் கேவலமாக நடந்துகொண்டால், நமது மனைவிமார் பொறுமையுடனிருப்

பார்களென்று கூறமுடியுமா? இக்காலத்துப் பெண்களைச் சாவித்திரி, சந்திரமதி முதலியவர்களின் அவதாரங்களென்று எண்ணிவிடவேண்டாம். உங்கள் நடத்தை கெடுமானல் அநேகமாய் அவர்கள் நடத்தையுங் கெடக்கூடுமென்பது உங்கள் நினைவில் இருக்கட்டும். நீங்கள் அவர்களை மதித்தால்தான் அவர்கள் உங்களை மதிப்பார்கள். கட்டாயத்தினுலும், அதிகாரத்தினுலும், பயத்தினுலும் சிலர் தங்கள் மனைவிமார்களை அடக்கியாள்கின்றனர். வெளித்தோற்றத்தில் அவர்களுக்கு அவர்களுடைய மனைவிமார் பயப்படுவார்களானுலும், இரகசியத்தில் அவர்கள் பலவாறு நினைத்து, நினைத்து மனம் புழுங்குவர் என்பது திண்ணம். கற்புடைய மங்கையர்கள் நம் நாட்டில் இப்போதும் இருக்கின்றனர் என்பது உண்மையேயாம். அவர்கள் மனம் நோகும்படி நடந்துகொள்வது பெரிதும் பாவமாகும். எப்போதும் கணவனும், மனைவியும் இரண்டு உடலும் ஓர் உயிரும்போல் இருந்து ஒற்றுமையாக வாழவேண்டும். ஒரு வண்டியிற் பூட்டப்பட்ட இரண்டு எருதுகள் ஒரே மனத்துடன் ஒரே வழியில் அவ்வண்டியை இழுக்காவிட்டால் அந்த வண்டி ஒழுங்காகச் செல்லுமா? ஒருபோதும் செல்லாது. அதுபோன்றே கணவனும், மனைவியும் ஒன்றுபட்ட மனமுடையவர்களா யில்லாவிட்டால் குடும்பமாகிய வண்டியை அவர்களால் ஒழுங்குடன் நடத்த முடியாது என்பது உண்மையேயாம். மனைவி அறிவற்றவளா யிருந்தாலும், கணவன் அறிவுடையவனு யிருந்தால் அவன் அவளை கொஞ்சமாவது திருத்தக்கூடும். அவ்வாறின்றிக் கணவனும் மூடனுய், மனைவியுமப்படியாயின் கதியேது? வாழ்வேதுகாண்? இருவருக்கும் ஒரு சுகமும் இல்லாமற் போய்விடும்.

விவாகம் செய்துகொள்ள விரும்பும் ஒவ்வொரு ஆண் மகனும் தன் விருப்பத்திற்கேற்ற பெண்ணைத்தேடி மணந்து

கொள்ள வேண்டும். மணம் செய்துகொண்டபின் 'மனைவி எனக்குத் தகுந்தவளல்ல' என்று குறைகூறுவது கேவலமும் அறிவீனமுமாகும். கலியாணமாகுமுன்னர்த் தாய்தந்தையர், சகோதர சகோதரி முதலியவர்களிடம் அன்புடையவர்களா யிருக்கின்ற சிலர், விவாகமானபின், அவர்களை வெறுக்கின்றனர். அவ்வாறு செய்வதும் கொடுமையேயாகும். மனைவி இறந்தால் வேறுமனைவியை ஒருவன் அடையக்கூடும். ஆனால், தாய் தந்தையர் சகோதர சகோதரிகள் முதலியவர்களை இழந்துவிட்டால் மறுபடியும் நாம் அவர்களைக் காணமுடியாது.

ஸ்ரீ இராமர் இராவணனோடு போர்தொடங்கியபோது, இந்திரசித்துவிட்ட நாகபாசத்தில் கட்டுண்டு இலட்சுமணர் மூர்ச்சையடைந்தார். அப்போது இராமர் மிகவருந்தி, 'இலட்சுமணா, நான் இனி என்னசெய்வேன்? உன்னை இழந்து, எவ்வாறு உயிர்வாழ்வேன்? உன்னை இழந்தபின்னர் நான் எதற்காக யுத்தம்செய்வது? இனி, சீதை எனக்கு எதற்காக? எத்தனை மனைவியர்களை வேண்டுமானாலும் ஒருவன் சம்பாதித்துக்கொள்ளலாம். ஆனால், உடன்பிறந்த சகோதரனை இழந்தால் மீண்டும் எவ்வாறு சம்பாதிப்பது?' என்று இன்னும் பலவாறு புலம்பி யிருக்கின்றார். தன் தாயார் தனக்காகத் தேடிய இராஜ்ஜியத்தை வெறுத்துத் தள்ளித் தன் தமையனுடைய பாதுகைகளைத் தன் தலையின் மீது எடுத்துச்சென்று அவைகளுக்கு முடிசூட்டித் தமையன் வருமளவும் தவக்கோலம் பூண்டு காலங்கழித்த பாதனைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? சகோதரனிடத்தில் கொண்டிருந்த பிரியத்தினால், அல்லவா பாதன் இன்றும் எல்லோராலும் புகழப்படுகிறான். சகோதரிகளிடத்தில் அனைவரும் பட்சமாயிருக்க வேண்டுமென்னும் கருத்தைக்கொண்டுதான் வெகுகாலத்திற்கு முன்னரே நல்ல

தங்கை கதை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அக்கதையை எழுதிய அறிவாளரின் கருத்தென்ன? ஆண்மக்கள் அனைவரும் தங்கள் சகோதரிகளிடம் அன்புடையவர்களா யிருக்க வேண்டுமென்பதேயாம். ஒவ்வொருவரும் தங்கள் தாய்மாரிடத்திலும் அன்புடையவர்களா யிருக்கவேண்டு மென்று நாம் சொல்லவும்வேண்டுமா? 'தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை' 'தாய்சொற்றுறந்தால்வாசகமில்லை?' என்பனபோன்ற வாக்கியங்கள் தாயின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றனவே! எப்பிழைசெய்து தப்பினும் தப்பலாம். தாய்க்குத் தீங்கிழைத்து எவனும் சுகமாய் வாழமுடியாது. பெற்ற தாயார் ஒரு சமயம் கொடுமைசெய்யினும் பொறுத்துக் கொள்ள வேண்டியது பிள்ளையின் கடமையாகும்.

கைகேயி இராமரைப்பார்த்து, 'இராமா? கடலாற் சூழப்பட்ட இந்த உலகத்தையெல்லாம் பரதனே ஆள வேண்டுமென்றும், நீ மரவுரி புனைந்து, சடைமுடி தரித்துக் கானகஞ்சென்று புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கிப் பதினான்கு வருடங்களைக் கழித்துப் பின்னர் அயோத்திக்கு வரவேண்டுமென்றும் உன் தந்தையார் கூறுகிறார்' என்று சொன்னாள்.

அவ்வார்த்தைகளைக் கேட்டவுடன், ஸ்ரீ இராமருடைய முகம் மலர்ந்த செந்தாமரையைப்போல் விளங்கியது. உடனே அவர் மகிழ்ச்சியுடன் கைகேயியைப்பார்த்து, 'அம்மா, நான் கானகம் போகவேண்டுமென்று என் தந்தையோ சொல்லவேண்டும்? 'போ' என்று நீங்கள் சொன்னாலும் நான் செல்லத் தயாராய் இருக்கின்றேன். உங்கள் வார்த்தையைக் கேட்காவிட்டால், "நான் உங்களுடைய் குமாரன்" என்று என்னைச் சொல்லிக்கொள்ள முடியுமா? என்தம்பியாகிய பரதன் இந்த இராஜ்ஜியத்தை ஆண்டாலென்ன? நான் ஆண்டாலென்ன? இரண்டும் ஒன்றேயாம்.

தாயே, கானகம்செல்ல உத்தரவு பெற்றுக்கொண்டேன். இதோ கானகம் செல்கின்றேன்' என்று கூறித் தமது மனைவியாரோடும், தம்பியாகிய இலட்சமணரோடும் கானகம் சென்றார்.

இவ்விஷயங்களெல்லாம் நமக்குத் தெரிந்திருந்தும் நாம் நமது தாய்மார்களை மதியாமலிருப்பது பாவமாகாதா? அவ்வளவுதானே?

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா பாரதயுத்தம் நடப்பதற்கு முன் குந்திதேவியை அழைத்து, 'மாமீ, துரியோதனாதியர்களுக்கும், பாண்டவர்களுக்கும் யுத்தம் நடக்கப்போகின்றது. அந்த யுத்தத்தில் துரியோதனாதியர் தோல்வியடையவும், உமது பிள்ளைகளாகிய ஐவரும் ஜயம்பெறவும் வேண்டுமானால், நீங்கள் ஒரு காரியம் செய்யவேண்டும். சிறிது நேரத்திற்கு முன் கன்னன் உங்களுடைய பிள்ளையென்று சொன்னேனல்லவா? அவன் உங்கள்பிள்ளை என்பதை நீங்கள் யாரிடத்திலும் சொல்லவேண்டாம். சொன்னால் பாரதயுத்தம் நடைபெறாது. பாரதயுத்தம் நடைபெறாமற் போகுமானால் உங்கள் மக்கள் ஐவரும் சுகப்படமுடியாது. ஆகையால் கன்னனிடத்திற்குப் போய் நீங்கள் அவனுடைய தாயார் என்பதை அவனுக்குக்கூறிப் பின்னர் அவனைப் பஞ்சவர்களோடு வந்து சேர்ந்துகொள்ளும்படி கேளுங்கள். அவன் சம்மதியாவிட்டால், அர்ச்சுனனைக் கொல்வதற்கென்றே அவன் வைத்திருக்கும் நாகபாசத்தை ஒரு முறைக்குமேல், அவன் அர்ச்சுனன்மீது விடாதபடி வரம் பெற்று வாருங்கள். அவ்வாறு வரம்பெறாவிடில் அந்த நாகபாசத்தினால் அர்ச்சுனன் மடிவான். அவன் மடிவானாயின் உடனே மற்றநால்வரும், துரௌபதையும் அவனோடு மடிவார்கள். ஐவர் இறப்பதினும், கன்னன் ஒருவன் இறப்பது கொடுமையாகாது. உடனே சென்று கன்ன

னிடம் நான் சொல்லிய வார்த்தைப் பெற்று வாருங்கள்,' என்று சொல்லியனுப்பினூர்.

குந்திதேவி தன் பாதங்களிரண்டும் சிவக்க நடந்து சென்று கன்னனுடைய மாளிகையை யடைந்தாள். அங்கிருந்த வாயிற்காப்போர் அவள் வருகையைக் கன்னனுக்குத் தெரிவித்தனர். குந்தியின் வருகையை அறிந்த கன்னன் அளவிலாச் சந்தோஷத்தோடு அவள்முன் சென்று அவளை அழைத்துப்போய் ஐவருக்குந்தாய் என்னும் முறை பற்றி அவளைத் தகுந்தவோர் ஆசனத்தில் அமரச்செய்து, பலவாறு உபசரித்தான். பின்னர் அவன் குந்தியைநோக்கி, 'அம்மணி, நாயினுங் கடையேனுகிய என்மீது இவ்வளவு தூரம் கிருபைவைத்து நீங்கள் இங்குவந்த காரணம் யாது?' என்று பணிவுடன் கேட்டான்.

கேட்டதும் குந்திதேவி அவனைநோக்கி, 'அப்பா, கன்னு, நீ என்னுடைய மகன் என்பதை அறிவாயாக. நான் இளம்வயதுடையவளா யிருக்கும்போது மகரிஷி ஒருவருக்குப் பணிசெய்துவந்தேன். அவர் எனக்கு அருள்சுரந்து ஐந்து குளிகைகள் கொடுத்து, "குந்தீ, நீ விவாகமானபிறகு இக்குளிகைகளில் ஒவ்வொன்றை ஒவ்வொரு காலத்தில் உனக்கு இஷ்டமான ஒவ்வொரு தேவதையை நினைத்துப் புசிப்பாயானுல், உனக்கு, நீ நினைக்கும் தேவதைகளின் அருளால் சற்புத்திரர்கள் பிறப்பார்கள்' என்று கூறினூர். பின்னர் நான் கன்னிமாடத்தில் இருக்கையில் முன்யோசனை யில்லாமல் மகரிஷி சொல்லிய வார்த்தையைப் பரிசோதிக்க வெண்ணி சூரியனை நினைத்து ஒரு மாத்திரையை உட்கொண்டேன். உடனே மகரிஷி சொல்லியது உண்மை யென்று கண்டேன். பின்னர் நான் உன்னைப் பெற்றேன். விவாகமின்றிக் கன்னி மாடத்திலிருந்த நான் உன்னைப் பெற்றதை யறிந்தால், உலகத்தார் உண்மையை

அறியாமல், மிக்கக் கேவலமான வழியில் நான் உன்னைப் பெற்றதாக வெண்ணி என்னைத் தூஷிப்பார்கள் என்று நான் எண்ணினேன். அதனால் நான் பயந்து அப்போது உன்னை ஒரு பெட்டியிலிட்டு ஆற்றில் விட்டு விட்டேன். உன் அதிர்ஷ்ட வசத்தால் பின்னர் நீ இந்நிலையை யடைந்தாய்' என்று கூறிப் பின்னர் குந்திதேவி கன்னனைநோக்கி, 'அப்பா, இத்தகைய காரியத்தைச் செய்த கொடியவளாகிய என்னை உன் தாய் என்று நீ ஏற்றுக் கொள்ளுவாயோ?' என்று கேட்டாள்.

அதற்குக் கன்னன், 'அம்மா, ஊழ்வினை யாரைவிடும்? விதி வழியே மதி சென்றது. அதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்? அது போகட்டும். நான் சொல்வதைத் தயை செய்து கேளுங்கள். "நான் உன் தாயார்: நான் உன் தாயார்" என்று தனித் தனியே கூறிக்கொண்டு எத்தனையோ ஸ்திரீகள் என்னிடம் வந்தனர். அவர்கள் கூறுவது "உண்மையா அல்லவா" என்றறிய வேண்டுமென்று எண்ணினேன். நீங்கள் என்னைப் பெட்டியில் வைத்து ஆற்றில்விடுகையில் என்னோடுவைத்திருந்த புடவை எப்படியோ இப்போதும் என்வச மிருக்கிறது. "நான் உன் தாய்" என்று என்னிடம் வருகிறவர்களிடம் நான் அப்புடவையைக் கொடுத்து உடுத்திக்கொள்ளச் சொன்னேன். அவர்கள் எல்லோரும்பொய் கூறியமையால் அந்தப் புடவையைக் கட்டியவுடன் எரிந்து போயினர். அம்மா, நீங்கள் என் தாய் என்பது உண்மையானால் நீங்களும் அந்தச் சோதனைக்கு உட்பட வேண்டும்' என்று கூறிப் பின்னும் அவன் குந்தியைப் பார்த்து, 'அம்மணீ, நீங்கள் உண்மையில் என் தாயாராயின் நான் கொடுக்கும் புடவையைக் கட்டிக் கொள்ளுங்கள். இன்றேல் வேண்டாம். உங்களுக்கு ஏதேனுங் கெடுதல் உண்டாகுமானால், "ஐவரிடத்திலுங்

கொண்ட பகையைக் கன்னன் அவர்கள் தாயினிடத்திற் காட்டினுன். தந்திரமாக ஒரு ஸ்திரீயைக் கொன்றவனும் ஆண்பிள்ளையோ” என்று கண்டோர் என்னை இகழ்ந்து பேசுவர். ஆகையால் ஆலோசித்து எதையும் செய்யுங்கள்' என்ருன்.

உடனே குந்தி கன்னனை நோக்கி,' அப்பா, நீ என் மகன் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. அதற்காக நீ அஞ்சவேண்டாம். பரிசோதனையை நடத்தலாம்' என்ருள்.

அப்பொழுதே சென்று கன்னன் ஒரு புடவையைக் கொண்டு வந்து குந்தியினிடங் கொடுத்தான். அவள் எள்ளளவும் அச்சமின்றி அதை வாங்கி உடுத்துக் கொண்டாள். அப்பொழுது அவள் யௌவனமங்கையாய் விளங்கினுள். கன்னன் சந்தேகம் நீங்கி அவளை வணங்கி ஆனந்த பாவச முற்ருன். தன் தாய் இன்னு ரென்றும், தன் குலம் இன்ன தென்றும் தெரியாதிருந்த கன்னனுக்கு உண்மை விளங்கிய பிறகு உண்டான ஆனந்தத்திற்கோர் அளவேயில்லை.

அப்பொழுது குந்திதேவி கன்னனைப் பார்த்து, 'கண்மணீ, வீரத்திலும், நற்குணத்திலும் சிறந்து விளங்கும் உன் தம்பிமாரோடு நீ வந்து சேர்ந்துகொள். அவர்களெல்லோரும் உன்னடி தொழ நீ அரசாளலாம்' என்ருள்.

அதைக் கேட்ட கன்னன் அவளை நோக்கி, 'அம்மணீ, நீங்கள் என்னைப் பெற்ற காலத்தில் என்னிடத்தில் அன்பின்றியோ' அல்லது உலகத்தார் ஏதேனும் சொல்வார்களென்று அஞ்சியோ என்னைப் பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டு விட்டீர்கள். அந்நாள் முதல் இந்நாள் வரையில் என்னைத் தன் உயிர்போல் நேசித்து வரும் துரியோதனனை நான் எவ்வாறு விட்டுப் பிரிவது? அது முடி

யாது. அம்மா, உலகத்தில் ஒருவன் தீமையே செய்யினும் அவனுக்கு நற்கதி கிடைத்தாலும் கிடைக்கும். ஆனால் ஒருவர் செய்த நன்மையை மறக்கின்றவனுக்கு நற்கதி கிட்டவே கிட்டாது. அம்மா, துரியோதனன், என்னைத் தன்னிலும் கௌரமாக நடத்தினான்; என்னை அரசனாக்கினான்; தன்னைப் பணிகின்றவர்கள் எல்லோரும் என்னைப் பணியுமாறு செய் தான். அது மட்டுமா? அவனுடைய மனைவி முதலிய வர்கள் இருக்கு மிடத்திலும் நான் சென்றால் என்னைத் தடை செய்வார் ஒருவருமில்லை. அவன் மனைவி என் னைத் தன்னுடைய சகோதரனைப் போலவே நேசித்து என்னிடம் பட்சம் பாராட்டுகின்றாள். ஒருநாள் துரியோ தனன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றிருந்தான். நான் அப்போது தேக அசௌக்கிய முற்றிருந்தமையால், அரண் மனையில் இருந்து விட்டேன். பிற்பகலில் துரியோதனன் மனைவி, 'அண்ணா, சிறிது நேரம் நாம் இருவரும் பொழுது போக்காகச் சொக்கட்டான் ஆடலாம் வாருங்கள்' என்று என்னை யழைத்தாள். நான் அவள் வேண்டுகோளுக்கு இசைந்து அவளோடு சொக்கட்டான் ஆடலானேன். அப் போது நான் அரண்மனையின் உட்புறத்தை நோக்கி உட் கார்ந்து கொண்டிருந்தேன். துரியோதனன் மனைவி அரண் மனையின் வாயிலை நோக்கி என் எதிரில் உட்கார்ந்துகொண் டிருந்தாள். வெகு நேரமாயிற்று. சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்த துரியோதனன் மனைவி என்னை நோக்கி, 'ஆடி யது போதும்' என்று கூறிக் கொண்டே அவசரமா யெழுந் தாள். அச் சமயத்தில், சொக்கட்டான் ஆட்டத்தில் நான் ஜயமடைவது நிச்சயமாயிருந்தது. அதனால் தனக்குத் தோல்வியுண்டாகக் கூடு மென்றெண்ணியே துரியோதன னுடைய மனைவி எழுந்திருக்கின்றாளென் றெண்ணி, நான் அவசரமாகக் கையை உயர்த்தி அவளை நோக்கி, 'என்ன

அவசரம்? இந்த ஆட்டம் முடியுமட்டு மாவது நீங்கள் எழுந்திருக்கக்கூடாது' என்றேன். நான் வேகமாய்உயர்த்திய என் கையானது அந்தக்ஷணத்தில் குனிந்த நிலையிலிருந்த அவளுடைய கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த முத்து மாலையின் மீது படவே அஃது அறுந்து முத்துக்களெல்லாம் தரையின் மீது சிந்தின. அச்சமயத்தில் துரியோதனன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் வருவதைப் பார்த்தே அவன் மனைவி சொக்கட்டான் ஆடுவதை விட்டெழுந்தா ளென்று நான் அப்போது உணர்ந்தேன். ஆயினும் அவள் நிற்கும் நிலைமையையும், அவள் கழுத்திலிருந்த முத்து மாலை அறுந்து முத்துக்கள் உதிர்ந்து கிடைப்பதையும் கண்ட துரியோதனன் என்னைப்பற்றி எவ்விதமான விபரீத அபிப்பிராயங்கொள்ளுவானோ என்று நான் எண்ணினேன். அச்சத்தினால் நான் மூர்ச்சையடைந்து விட்டேன். பிறகு நான் கண்விழித்துப் பார்க்குபோது துரியோதனன் தன் தொடையின் மீது என் தலையை வைத்து எனக்கு உபசாரஞ் செய்து கொண்டிருப்பதையும், அவன் மனைவி எனக்கு விசிறுவதையுங் கண்டேன். எனக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. பின்னர், நான் களைதெளிந்து எழுந்து உட்கார்ந் தேன். அப்போது துரியோதனன் என்னை நோக்கி, "அண்ணா, உமது மன நிலைமையும், என் மனைவி கற்புடையவ ளென்பதையும் நான் அறிவேன். ஆகையால் நீர் கொண் டுள்ள அச்சத்தைத் தவிர்ப்பீராக' என்று கூறி அவன் மறுபடியும் என்னைப் பார்த்து, 'சிந்தியுள்ள இம்முத்துக்களை நீர் பொருக்குகிறீரா? நான் கோர்க்கட்டுமா? நான் பொருக்கட்டுமா, நீர் கோர்க்கின்றீரா?" என்று கேட்டான். பிறகு நடந்த விஷயங்களை நான் கூற வேண்டிய அவசிய மில்லை—' என்று கூறி கன்னன் மீண்டும் தன் தாயாராகிய குந்திதேவியைப் பார்த்து, 'அம்மா, நீங்கள் அறியாத

தொன்று மில்லை: துரியோதனன் மற்றவர்களிடத்தில் எவ்வாறு நடந்து கொண்ட போதிலும் என்னிடத்தில் பெரிதும் பட்ச முடைவனுயிருக்கின்றுன். என்னிடத்தில் அவன் பெரிதும் பட்சமுடைய்வனுய் இருக்கின்று னென்பதற்கு நான் இப்போது கூறிய சம்பவமே போதுமானது. இவ்வாறு என்மீது பேரன்பு கொண்டுள்ள துரியோதனனை நான் எப்படி விட்டுப் பிரிவேன்? அது முடியாத காரியம்' என்று சொன்னுன்.

அவன் சொல்லியவைகளையெல்லாம் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த குந்திதேவி அவனுடைய அறிவுக்கு மெச்சி அவனைப்பார்த்து, 'அப்பா, குமாரா, கன்ன, நீ உன் இஷ்டப்படியே நடப்பாயாக' என்று கூறினுள்.

உடனே கன்னன் அவளைநோக்கி, 'அம்மணீ, இவ்வளவு காலம் மௌனமாயிருந்து, இப்பொழுதுதான் ஸ்ரீகண்ண பிரான் தங்களிடம் என் வரலாற்றைக் கூறித் தங்களை என்னிடம் அனுப்பியதாகத் தாங்கள் சற்றுமுன் என்னிடங் கூறினீர்கள். காரணமின்றி ஸ்ரீகண்ணன் தங்களை என்னிடம் அனுப்பி யிருக்கமாட்டான். தாங்கள் என்னிடம் வந்ததற்குக் காரணம் யாது?' என்று கேட்டான்.

குந்தி மௌனமாயிருந்தாள்.

அதைக்கண்ட கன்னன் மீண்டும் அவளைப்பார்த்து, 'அம்மணீ, நீங்கள் ஏன் மௌனமாயிருக்கின்றீர்கள்? நீங்கள் நாடிவந்த காரியம் யாதென்பதை என்னிடங் கூறுங்கள். என்னுல் ஆகக்கூடிய காரியத்தை நான் செய்யத் தடையில்லை. தாயின் விருப்பப்படி நடக்கத் தவறும் தனயனும் உண்டோ? என்னைத் தேர்ப்பாகனுடைய மகனென்று எல்லோரும் கூறுவதை நான் உண்மையென்று நம்பி இதுவரையில் துன்புற்றிருந்தேன். நான் உமது மகனென்று எனக்குத் தெரிந்தபிறகு நான் அடையும் ஆனந்

தத்திற்கோர் அளவில்லை. ஆகையால் நீங்கள் எதைக்கேட்டினும் கேட்கலாம்———'என்முன்.

உடனே குந்தி கன்னனைப்பார்த்து, 'மகனே, இனி கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் நேரிடப்போகின்ற யுத்தத்தில் நீ அர்ச்சுனனோடு சண்டையிடும்போது, நாக பாசத்தை ஒரு முறைக்குமேல் மறுமுறை நீ அவன்மீது விடாமல் இருக்கவேண்டும். அதுவே நீ யெனக்குத் தரக் கூடிய வரமாகும்!' என்று சொன்னாள்.

சொன்னதும் கன்னன் குந்திதேவியைப்பார்த்து, 'அம்மணீ, நான் அர்ச்சுனன்மீது ஒருமுறை நாகபாசத்தை விட்டும், அவன் உயிரோடு இருப்பானாயின், மறுபடியும் அவன் மீது அந்நாகபாசத்தை விடமாட்டேன். அவ்வாறு விடுவதும் என்னைப்போன்ற சுத்த வீரனுக்கு அழகல்ல. ஆகையால் நீங்கள் கேட்டவரத்தை நான் கொடுத்தேன்' என்று கூறிப் பின்னும் கன்னன் குந்திதேவியைப் பார்த்து, 'அம்மணீ, தாங்கள் எனக்கு இரண்டு வரங்கள் தரவேண்டும். ஒன்று பாரதயுத்தத்தில் அர்ச்சுனன்விடும் அம்பினால் நான் இறந்துபோவேன் என்பது உண்மையாகையால் நான் இறந்தவுடன் நான் உமது மகனென்பதை நீர் உலகமறியச் செய்ய வேண்டும். இரண்டாவது, நான் இறக்கும்வரையில் நான் இன்னாரென்பதை என் சகோதரர் ஐவருக்கும் நீர் வெளியிடக்கூடாது. அவ்வாறு வெளியிடுவீர்களானால் ஐவரும் இந்த இராஜ்ஜியத்தை எனக்கே கொடுத்துவிடுவார்கள். அவ்வாறு கொடுப்பார்களானால் நான் நன்றிமறவாமல் இதைத் துரியோதனனுக்குக் கொடுத்துவிடுவேன். ஆகையால் நான் இப்பொழுதுகேட்ட வரமிரண்டையும் தாங்கள் எனக்குத் தந்தருளவேண்டும்' என்முன்.

என்றதும் குந்தி அவனைப்பார்த்து, 'மகனே, உன் விருப்பப்படியே யாகட்டும். இப்பொழுது நீ கேட்ட

இரண்டு வரங்களையும் நான் கொடுத்தேன்' என்று கூறிப் பின்னும் குந்தி கன்னனோடு அளவளாவிப் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பிரியமுடியாமல் அவனைவிட்டுப் பிரிந்து சென்றாள்.

இப்புத்தகத்தை வாசிக்கும் சகோதரர்களே, நீங்கள் கன்னனுடைய பெருங் குணத்தை எண்ணிப் பாருங்கள். அவன் தன் தாயாரிடத்தில் நடந்துகொண்ட நேர்மையைக் கவனியுங்கள். அர்ச்சுனனுடைய நன்மையைக்கருதி தன்னிடம் வரங்கேட்கவந்த குந்தியின் வார்த்தையை அவன் தன் சிரமேற்கொண்ட தன்மை அவனுடைய பெருங்குணத்தைக் காட்டுகின்றது. அன்றியும் அவன் தன் சகோதரனுடைய நன்மையைக் கருதித் தன் தாயின் வார்த்தையின்படி நடப்பதாக ஒப்புக்கொண்டான். இவ்வாறு தம்நலங் கருதாது, தம் தாயின் வார்த்தையை நிறைவேற்றக் கூடியவர்கள் இக்காலத்தில் எத்தனைபேர் இருக்கக்கூடும்?

கன்னனைப் போலவே நாம் நம்முடைய தாய்மாரின் வார்த்தையைக் கேட்டு நடக்கவேண்டுமென்று சொல்லவும் வேண்டுமோ?

அதுமட்டுமா! முன்னொரு காலத்தில் ஜமதக்கினி என்றொரு மகரிஷியிருந்தார். அம்மகரிஷிக்கு இரேணுகாதேவி என்னும் பெயர்வாய்ந்த மனைவியார் ஒருவரிருந்தனர். அவ்வம்மணி ஒவ்வொரு தினமும் நதிக்குச்சென்று நீராடி தம்முடைய கற்பின் மகிமையினால் தண்ணீரைக் குடமாகச் செய்து அக்குடத்தில் தண்ணீர் முகந்துவருவது வழக்கம். ஒருநாள் அவ்வம்மையார் நதிக்குச்சென்று குளித்துக்கொண்டிருக்கையில் ஆகாயவழியே கந்தர்வர் இருவர் போயினர். அவர்களைக் கண்டவுடன் அவ்வம்மையார், 'இத்தகைய அழகிய புருஷர்களும் உலகில் இருக்கின்றார்களா?' என்று நினைத்தார்; பின்னர், குளித்துவிட்டுக் குடத்தைத் திரட்டு

கையில் எப்பொழுதும்போல் குடம் அவருக்குத் திரண்டு வரவில்லை. அதனால் அவர் ஏங்கி வாடி வருந்தி பர்ண சாலைக்குச் சென்றார். ஆகாயத்திற் சென்ற கந்தர்வர்களின் அழகைக் கண்டு வியந்து அவ்வம்மையார் கற்பிழந்தமையை யறிந்த ஜமதக்கினி மகரிஷி அவர்மீது கோபங்கொண்டு தமது குமாரர் பரசுராமரை வரவழைத்து, அவரைப் பார்த்து 'பரசுராமா, உன்தாய் கற்பிழந்தவளானாள். ஆகை யால் நீ அவளைச் சிரச்சேதம் செய்துவா' என்று கட்டளை யிட்டார்.

உடனே பரசுராமர், 'தந்தை சொன் மிக்க மந்திரமில்லை' என்னுங் கருத்தை தம்முட்கொண்டு, தம்தாயை அழைத் துச்சென்று சிரச்சேதம் செய்துவிட்டுத் தம் தந்தை யிடம் வந்து நடந்ததைக் கூறினார். அவர் கூறியதைக் கேட்ட ஜமதக்கினி மகரிஷி அவரைப்பார்த்து, 'பரசுராமா, எனக்கு உன்மீது அளவுகடந்த பிரியமுண்டா யிருக் கின்றது. தந்தையாகிய என் வார்த்தையைச் சிரமேற் கொண்டு நீ உன் தாயைச் சிரச்சேதம் செய்தபடியால் இப் பொழுதே நீ கேட்கும் வரத்தைக் கொடுக்க நான் தயாரா யிருக்கின்றேன். உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள், தருகிறேன்' என்றார்.

அதற்கு, அறிவு நிரம்பிய பரசுராமர் அவரைப் பார்த்து, 'தந்தையே, இறந்துபோன என் தாயாரை நான் மறுபடியும் முன்போல் உயிரோடு காணவேண்டும். இதைத் தவிர எனக்கு வேண்டியது வேறொன்றுமில்லை. ஆகையால், நீங்கள் அவரை எழுப்பித் தரவேண்டும். இதுவே நான் கேட்கும் வரமாகும்' என்று சொன்னார்.

மைந்தன் தாயினிடத்தில் கொண்ட அன்பைக் கண்ட ஜமத்கினி மகரிஷி தமது மைந்தனை நோக்கி, 'பரசுராமா, நீ உன் தாயிடத்தில் கொண்ட அன்பைக் கண்டு பெரிதும்

சந்தோஷப்பட்டேன். இதோ இந்தக் கமண்டலத்திலிருக்கும் தண்ணீரை எடுத்துக் கொண்டு போய் வெட்டுண்டு கிடக்கும் உன் தாயாரின் சிரத்தையும், உடலையும் ஒன்று சேர்த்து வைத்து அவற்றின்மீது தெளிப்பாயாக. நீ அவ்வாறு செய்வாயானல் உன் தாயார் உயிர் பெற்றெழுவது திண்ணம்!'' என்று கூறினர்.

தந்தையாரின் இஷ்டப்படியே பரசுராமர் கமண்டலத்திலிருந்த ஜலத்தை எடுத்துக்கொண்டு போய்த் தம் தாயாரின் உடலையும்; தலையையும் ஒன்று சேர்த்து வைத்துத் தெளித்தார். தெளித்த மாத்திரத்தில் இரேணுகா தேவியார் உயிர்பெற்றெழுந்தார்.

17584

பரசுராமர் தந்தையின் வார்த்தையைத் தட்டாமல், முடிவில் தாய்க்குத் தீங்கு நேராமல் நடந்து கொண்ட விதத்தைப் பாருங்கள். இவ்வாறு நடந்துகொள்ளக் கூடிய பிள்ளைகள் இக்காலத்தில் எத்தனை பேர் இருக்கக்கூடும்? தாய்தந்தையர்களுக்குள் எவ்வளவு அபிப்பிராய பேதமிருப்பினும் அதைப்பற்றித் தான் கவனியாமல் அவர்கள் இருவர் மனமும் நோவாதபடி நடப்பவனே புத்திரனுவான்; அவனே பிற்காலத்தில் தன் கடமையை அறியக்கூடியவனுமாவான்.

கலியாணம் செய்து கொண்டவர்களில் எத்தனையோ பெயர் தங்கள் மனைவிமாரின் வார்த்தையைக் கேட்டுக் கொண்டு தாய், தந்தை, சகோதரன், சகோதரி முதலியவர்களிடம் வெறுப்பைக் காட்டுகின்றனர். இச்செய்கை கேவலம் மிருகத்தின் செய்கையே யன்றி மனிதர்களுடைய செய்கையாகாது.

விவாகம் செய்து கொண்டவன் தன் கடமையை நன்று யறிந்து, நடந்துகொள்ள வேண்டும். இன்றேல்,

அவனை உலகத்தார் விரும்பமாட்டார்கள். கலியாணம் செய்துகொள்ளாதவனும், குடும்பத்தில் பொருப்பற்றவனும் எப்படி நடந்துகொண்டாலும் அவர்களைக் கேட்பார் எவரு மில்லை. ஆனால், விவாகம் செய்துகொண்டவன், உலகத்தார் தன்னை மதிக்கவேண்டுமென்று நினைப்பானாயின், அவன் எல்லோ ரிடத்திலும் அன்புடையவனா யிருக்கவேண்டும். தாய், தந்தையர், சகோதரி முதலியவர்களின் வார்த்தை யைக் கேட்டுக்கொண்டு தன் மனைவியை இம்சிக்கிறவன் மூடனாவான். தன் மனைவியின் வார்த்தையைக் கேட்டுக் கொண்டு தாய், தந்தையர்களை இம்சிக்கிறவன் பேடி யாவான். அவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் நன்மை யுண்டாகாது. மனிதர்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் நல் வழியைத் தெரிந்துகொண்டு, அவ்வழியில் நடக்கவேண் டும். 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று எண்ணி நடக்கின்றவன் ஒருபோதும் முன்னுக்கு வரமாட் டான். அதிலும் ஒரு ஸ்திரீக்குத் தலைவனானவன், கணவன், என்னும் பட்டத்திற்குரியவன் மிகவும் ஒழுங்கான வழியில் நடந்துகொள்ளவேண்டும். இல்லாவிடில் அவனுடைய வாழ் நாட்கள் அவனுக்குத் துன்பத்தையே தரும். நம்மைக் குறித்து எவரும் இழிவாகப் பேசாதிருக்கும்படி நாம் பார்த் துக்கொள்ள வேண்டும். அதற்கென்ன செய்வது? நாம் நமது மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நியாயமான வழி யில் நடந்து கொள்ளவேண்டும். அவ்வாறு நடந்து கொள்ளுவோமானால் நமக்கு நன்மையே விளையும். எவ்வளவு சொல்லியும் என்ன பயன்? வேப்பமரத்தைப் பால்வார்த்து வளர்த்தாலும் அதன் காய் கசக்குமோ? இனிக்குமோ? நாய்வாலை நிமிர்த்த எவராலேனும் ஆகுமோ? பேய்வாழும் சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளி பெரிய விளக்கேற்றி வைத் தால் அச்சுடுகாடு மாடமாளிகையாய்விடுமோ? தாய் தந்தை

முதலியவர்களிடத்திலும், மனைவி, சகோதரி முதலியவர்களிடத்திலும் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைக் கூட தெரிந்துகொள்ள விருப்பமில்லாத மூடனுக்கு எவ்வளவு நற்புத்தி சொல்லியும் யாது பயன் உண்டாகப் போகிறது?

'விவாகம் செய்துகொண்ட கணவன் தன்கடமையை நன்றாயுணர்ந்து அதற்கேற்றபடி நடந்து கொள்ளவேண்டும்' என்று நாம் பலமுறை சொல்லிவிட்டோம். விவாகம் செய்துகொண்டவன் தாய், தந்தை, சகோதரர், சகோதரிகள், மனைவி முதலியவர்களிடம் நியாயந்தவறாமல், ஒருவர் வார்த்தையைக் கேட்டுக் கொண்டு மற்றவர்களைத் தூஷியாமல், தராசுமுனைபோல் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும். குற்றங் கண்டவிடத்து யாராயிருந்தாலும் கவனித்துத் திருத்தவேண்டும். நியாயமாக நடந்துகொள்ள விரும்புகிறவன் எல்லோரையும் சமமாக நினைக்கவேண்டும். 'இவன் நியாயபுருஷன்' என்று எல்லோரும் சொல்லிக் கொள்ளும் வழியில் நடந்துகொள்ளுகிறவனே வீரனாவான். தாட்சண்யத்திற்குக் கட்டுப்பட்டு நியாயத்தைக் கைநழுவ விடுகிறவன் நாயினுங் கடையனாவான். தாய், தந்தை, சகோதரி, சகோதரன், மனைவி முதலியவர்களை அவரவர்களுக்குரிய மரியாதையின்படி நடத்திவரவேண்டும். மாமன், மாமி முதலியவர்களிடம் மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டியதும் அவசியமேயாம். நம்மை ஒருவர் மதிக்க வேண்டுமானால், முதலில் நாம் அவரை மதிக்கவேண்டும். இந்த இரகசியம் அநேகருக்குத் தெரியாமல் அவதிப்படுகின்றனர். 'முன்கை நீண்டால் முழங்கை நீளும்' என்னும் பழமொழியும் இங்குக் கவனிக்கத்தக்கதே. செல்வத்திற்சிறந்த சீமானாயினும் அவனும் எல்லோரிடத்திலும் அன்புடையவனாய் நடந்துகொள்ளுவதே நலமாகும். இன்சொல்

லுக்கும், ஒழுக்கமாக நடந்துகொள்ளுவதற்கும் யாதொரு செலவுமில்லே. அதைவிடுத்துக் கர்வத்துடன், கடுகடுத்த வார்த்தைகளேப் பேசக் கற்றுக்கொண்ட மனிதர்கள் பேய் இனத்தைச் சேர்ந்தவர்களோ? அல்லது நாற்கால் பிராணி வர்க்கத்தின் உறவினர்களோ நாம் அறியோம். குடும்பத்தை நடத்த முன்வந்துள்ள நாம் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் அநேகம் இருக்கின்றன, அவைகளையெல்லாம் நாம் அறிந்து ஒவ்வொன்றுக்கும் தகுந்தாற் போல் நடந்துகொள்ள வேண்டும். வாழ்க்கையில் நாம் விரும்புகிறபடி யாவும் நடைபெறுமென்று; நாம் எதிர் பார்க்கமுடியாது. நண்பர்கள், உறவினர்கள், மனைவி முதலியவர்கள் நமக்கேற்றவர்களா யிருந்தாலும் இருப்பார்கள்; சில சமயங்களில் மாறுபட்டவர்களா யிருப்பினுமிருப்பார்கள். அவர்களை ஒதுக்கித் தள்ளுவது கூடாமையல்லவா? நாம் அவர்களை எப்படியாவது ஒழுங்கு படுத்திக்கொண்டு போவதே நன்மையாகும்.

இக் காலத்தில் உண்மையான சிநேகிதர்களைக் காண்பது அருமையினும் அருமையாகவே யிருக்கின்றது. ஆகையால் சிரித்துக் கொண்டு பேசுகிறவர்களை யெல்லாம் சிநேகிதர்களென்று எண்ணி மோசம் போகக் கூடாது. சில சிநேகிதர்கள் தங்களுக்கு ஒரு விஷயத்தைப்பற்றிக் கொஞ்சமாகத் தெரிந்திருந்த போதிலும் ஒன்று மறியாதவர்களிடம் அவ்விஷயத்தில் தங்களுக்குத் தெரியாத தொன்றுமில்லை என்று பெருமை பாராட்டிக் கொள்ளுவார்கள். சில சிநேகிதர்கள் தங்கள், பெருமையையும் புகழையுமே ஓயாது தாங்கள் சொல்லப் பிறர் கேட்க வேண்டுமென்று விரும்புவர். சில நண்பர்கள் எவ்வகையிலும் மற்றவர்கள் தங்களுக்கு அடங்கி நடக்கவேண்டுமென்று எண்ணுவர். சில நண்பர்கள் மித்திரபேதம் செய்து யோக்கியனை மற்றவர்கள்

அயோக்கியன் என்று நினைக்கும்படி செய்து தங்களை எல்லோரும் உயர்ந்தவன், அறிவாளி என்று எண்ணும்படி செய்வர். சில சிநேகிதர்கள் தாங்கள் அறிந்துள்ளது எவ்வளவு என்று எண்ணிப்பாராமல் தங்கள் அறிவு ஆகாயத்திற்கு அப்பாலும் பறந்து செல்லத் தக்கதென்று எண்ணுவர். இப்படிப்பட்ட நண்பர்களை அவர்களினும் தாழ்ந்த அறிவுடையவர்கள் சூழ்ந்து ஆனந்தப்படுவர். மேற்கூறிய குணங்களுடையவர்களை எவராலுந் திருத்தமுடியாது. பிறர் சொன்னாலும் கேளாமல் அவர்கள் சொல்லுகிறவர்கள்மீது பாய்வார்கள். ஆகையால் அத்தகைய குணம் வாய்ந்தவர்களோடு சேராமல், நமக்கு அத்தகைய குணம் வாராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். உலகம் யாவும் நிறைந்த நந்தவனம் போலிருக்கின்றது. நந்தவனத்தில் மறைந்து திரியும் நல்ல பாம்புகளைப் போல் இவ் வுலகத்தில், துர்க்குணம் வாய்ந்த அநேக மனிதர்கள் நல்லவர்கள் போல் நடமாடிக் கொண் டிருக்கின்றனர். அவர்களை நாம் அறிந்து ஜாக்கிரதையாக நடக்கவேண்டும். நம்முடைய நன்மையில் விருப்பமுடையவர்கள் நமது தாய் தந்தையர், மனைவி முதலியவர்களே யாவர்; நமது நன்மையில் விருப்பமுடைய வேறு எவரையும் நாம் இவ்வுலகத்தில் காணமுடியாது. சகோதரி, சகோதரர்கள்கூட தங்களுடைய மக்கள் முதலியவர்களிடம் அன்பு காட்டுகின்ற அளவு நம்மிடத்தில் அன்பு காட்டமாட்டார்கள். இஃது உலக இயற்கை! நான் உண்மையைக் கூறுகின்றேன். இயற்கைக்கு விரோதமாக மானிடர்களால் நடந்துகொள்ள முடியாது. அப்படி நடந்து கொள்ளுகிறவர்கள் இருப்பார்களாயின் அவர்கள் மனிதர்களல்ல. தேவர்களே யாவர்! 'நல்லது, பாதனே! நாடாளட்டும். நான் காடு செல்கின்றேன்' என்று தம்பியினிடத்தில் அன்பு காட்டிய இராமபிரானைப் போன்ற

தமயனையாவது, 'என் தமயன், ஸ்ரீராமன் இருக்க நான் அரசாளுவது முறையன்று' என்று தமயனிடத்தில் பேரன்பு கொண்டிருந்த பரதனைப் போன்ற தம்பிமார்களையாவது இக்காலத்தில் காண முடியுமா? முடியாது. நமது தாய், தந்தை, மனைவி முதலியவர்களைப் போல் நம்முடைய இலாப நஷ்டத்தில் கவலையுடையவர்கள் வேறு எவரும் இருக்கமாட்டார்கள். ஆகையால் நாம் அவர்களிடம் அன்புடையவர்களா யிருக்கவேண்டியது அவசியமல்லவா? மனைவி முதலியவர்கள் தகாத வழியில் நடப்பார்களாயின் அப்பொழுதும் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இதனால் நாம் நமது தாய் தந்தையர், மனைவி முதலியவர்களைமட்டும் கவனித்துக் கொள்ளவேண்டு மென்பதும் என் கருத்தல்ல.

ஒவ்வொரு மனிதனும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுவதோடு தன் தாய் தந்தையர்களையும், மனைவி மக்களையும் காப்பாற்ற வேண்டும். பின்னர் சகோதரி, சகோதரர்களைக் காப்பாற்ற வேண்டும். சகோதரி சகோதரர்கள் தன் பாதுகாப்பில் இருப்பார்களானால் அவர்களைத் தனக்குச் சமமாக வைத்துக் காப்பாற்றுவதே தருமமாகும். பின்னர், சுற்றத்தாரைக் கவனிக்க வேண்டும். அதன்பிறகு நண்பர்களை ஆதரிக்கவேண்டும். அதற்குமேல் தன் ஊராரைப் பாதுகாக்கவேண்டும்! பின்னர், தன் நாட்டார், தன் தேசத்தார் முதலியவர்களைக் கவனிக்கவேண்டும்.

ஞானிகளும் உலகத்தின் நன்மையோடு தங்கள் நன்மையையும் கவனித்திருக்கின்றனர். தம் தந்தையாகிய சந்தனுவின் விருப்பத்தை நிறைவேற்றித் தம் ஆயுள் முழுவதும் பிரமசாரியாயிருந்த வீஷ்மரினும் தம் தந்தையினிடம் அன்பு செலுத்தியவர்கள் வேறு ஒருவருமில்லை. தன்னைப் பெற்றதைவிட வேறொரு நன்மையையும் தனக்

குச் செய்தறியாத குந்திதேவியினிடம் கன்னன் காட்டிய அன்பை நாம் முன்னரே கூறியிருக்கின்றோம். ஆகையால், தாய் தந்தையர்களிடம் அன்புடையவர்களா யிருக்கவேண்டு மென்பதற்கு இனியும் நாம் திருஷ்டாந்தங் காட்ட வேண்டுமோ ?

மனைவி மக்களின் நன்மையைக் கருதுகிறவர்களே இக் காலத்தில் அதிகமா யிருக்கின்றனர். அதற்குத் திருஷ் டாந்த மொன்றும் நாம் காட்டவேண்டியதில்லை. நாம் நமது சகோதரிகளி னிடத்தில் அன்புடையவர்களா யிருக்க வேண்டு மென்பதற்குத் திருஷ்டாந்தமாக முற்காலத்தி லிருந்த அறிவாளிகள், 'நல்ல தங்கை' முதலிய சரித்திரங் களை எழுதி வைத்திருக்கின்றனர் என்று முன்னரே நாம் கூறி யுள்ளோம்: சகோதரர்களிடம் அன்புடன் இருக்கவேண்டு மென்பதற்குப் பரதனையும், இராமனையும் தவிர வேறு யாரைத் திருஷ்டாந்தமாக மறுபடியும் எடுத்துக் காட்ட முடியும்? தன் நன்மையைக் கவனியாமல் தன் சுற்றத்தா னாகிய துரியோதனன் நன்மையைக் கருதி அவன் கேட்டுக் கொண்டபடி அவன் பூரண அமாவாசை யன்று தங்களை எதிர்த்தால் தாங்கள், சகோதரர் ஐவரும், மடிவது திண் ணம் என்று நாள் வைத்துக் கொடுத்த சகாதேவனைத் தவிர சுற்றத்தாரிடம் உண்மையாக நடந்து கொண்டவர் வேறு எவர்? ஒருவருமில்லை. இருப்பினும், ஒரு சிலரே காணப்படு வர். தான் கலியாண மேடையில் மணமகளின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கையில், தேசிங்கு ராஜன் அனுப் பிய ஓலையில் எழுதப்பட்டிருந்த விஷயத்தைப் படித்துப் பார்த்து கையிலிருந்த தாலியை அப்படியே கீழே வைத்துவிட்டுச் சென்று தேசிங்குராஜனுக்காகப் பரிந்து தன் இனத்தானாகிய ஆற்காட்டு நபாபோடு யுத்தம் செய்து உயிர்விட்ட மகம்மதுகானைவிட நட்பின் பெருமையை

உணர்ந்தவர்கள் யார் இருக்கமுடியும்? தம் தந்தைக்கு ஒரே புத்திரரும், சென்னை ஆம்புலன்ஸ் லான்ஸ் கார்ப்ரலுமாகிய நரகரிஹோத்தாத்ரி என்னும் பெயரினையுடைய வாலிபர், ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதாம் வருடம், டிசம்பர் மாதம், இருபத்தைந்தாம் தேதி சென்னைப் பீப்பில்ஸ்பார்க்கில் வேடிக்கை நடந்துகொண்டிருந்தபோது, ஆபத்தில் அகப்பட்டுக்கொண்ட ஒருவரைக் காப்பாற்றச் சென்று தம் உயிரைக் கொடுத்தார்! இவரைப்போல் தம் ஊராரின் நன்மைக்காகப் பாடுபடுகிறவர்கள் எப்போதும் எல்லோராலும் புகழப்படுவர். விராட நகரத்திலிருந்த பசுக்கள் துரியோதனன் வசம் சிக்கியபோது ஊரார் வருந்தினர். அவர்களுடைய துன்பத்தைக் கண்டு சகியாது, உண்மையில் தான் வலிவற்றவனா யிருந்தும், விராடராஜனுடைய மகனாகிய உத்தரகுமாரன், துரியோதனாதியர்களின்மீது போருக் கெழுந்தான். பின்னர் அவன் சரித்திர மெப்படியாயினும் ஆகுக. முதலில் அவன் நடந்துகொண்டமாதிரி, அவன் தன் நாட்டாரிடம் கொண்ட அன்பையே குறிக்கின்றது. எவருடைய புகழையும் இகழையும் கருதாது உலகத்தாரின் நன்மையொன்றையே கருதிவரும் மகாத்மாகாந்தி அவர்களினும் சிறந்து தேசத்தாருக்காகப் பாடுபடும் ஒருவரைக் காட்ட நம்மாலாகுமா? முடியாது.

இதுவரையில் நாம் எழுதிய விஷயங்களில் எத்தனையோ கருத்துக்கள் அடங்கிக் கிடக்கின்றன. 'கணவனின் கடமையை எழுத வந்தவர் இவைகளை யெல்லாம் கூற வேண்டிய காரணம் யாது?' என்று சிலர் நினைக்கலாம். ஆழ்ந்து கவனித்தால் இதுவரையில் நாம் கூறியவைகளெல்லாம் கணவன் என்னும் பெயர்க்குரிய ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டியவைகளேயாம் என்பது தெரியாமற் போகாது.

குடித்தல், சூதாடுதல், பிறர் மனைவியை இச்சித்தல், தாசிகளை நாடிச் செல்லுதல் முதலிய துர்க்குணங்களில் அகப்பட்டுக் கொள்ளாமல் ஒவ்வொருவரும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

குடித்தல்: இப்பழக்கம் இக்காலத்தில் ஏழை முதல் பெரிய மனிதர்கள் என்று சொல்லிக்கொள்வோர் வரை யில், ஏன்? பெரும்பாலும் எல்லோரிடத்திலும் வேரூன்றி யிருக்கின்றது. 'மகாத்மாகாந்தியடிகள் உயர்ந்தவர்; அவர் சொல்கிறபடி நடக்கவேண்டும்'என்று சொல்கிற அறிவாளி களில்கூட அநேகர் இப் பழக்கத்தில் மூழ்கிவிட்டபடியால், இவ்விஷயத்தில் மட்டும் மகாத்மா அவர்கள் சொல்கிறதைக் கேட்க முடியாதவர்களா யிருக்கின்றனர். ஆம்—குடியின் பழக்கம் அப்படிப்பட்டது. 'குடியாவிட்டால் என்னால் ஒரு வரியும் எழுத முடியாது' என்று கூறும் நூலாசிரியர்களும் இருக்கின்றனர். 'உலகத்தைத் திருத்தப் போகிறேன்' என்று கூறி வெளிவரும் தேசாபிமானிகளிற் பலரும், நூலா சிரியர்களிற் சிலருமே தொட்டுக்கொண்ட இவ்வழக்கத்தை விட்டுவிட முடியாதவர்களா யிருக்கின்றார்களென்றால், மற் றவர்களைப் பற்றிக் கேட்பானேன்!

முதலையின் வாயிற் சிக்கிக்கொண்டவன் மறுபடியும் மீளுவது எவ்வாறு அருமையோ அவ்வாறே இக்குடிப் பழக்கத்தில் சிக்கிக் கொண்டவனும் மீளுவது அருமை யாகும். முதலையின் வாயில் அகப்படாமல் நீர் நிலையின் அருகிலிருப்பவர்கள் ஜாக்கிரதையா யிருப்பது போலவே குடிப்பதற் கேற்ற வசதிகள் எளிதாக அமைந்துள்ள இடத் திலிருப்பவர்களும் தங்கள் மனம் அவ் விஷயத்திற் செல் லாதபடி தாங்கள் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். புலிக் குட்டியையும், முதலைக் குட்டியையும் வளர்த்தால் கடைசி யில் என்ன பலன் கிடைக்குமோ அதே பலன்தான் குடிக்

கும் பழக்கத்தில் ஈடுபட்டவருக்கும் கிடைக்கும். குடிப்பவன், விஷத்தைத் தின்பவனுக்குச் சமமாகின்றான். விஷம் தின்றவுடன் கொல்லும். கள்ளும், சாராயமும், பிராந்தியும், விஸ்கியும், தன்னைப் பருகக் கற்றுக் கொண்டவனின் அறிவைக் கெடுத்து, எல்லோரையும் அவனுக்குப் பகையாக்கி, புலிக்குணம் போன்ற கொடுமையான குணத்தை அவனுக்கு அளித்து, தரும குணத்தை அவனிடத்திலிருந்து போக்கி, மரியாதையை நீக்கி, காண்போர் அனைவரும் அவனை நிந்திக்கும்படி செய்து முடிவில் தரித்திரத்திற்குட்படுத்தி எமலோகத்திற்குப் போக அவனுக்கு வழிகாட்டும். குடி வெறியினால் தம் மனைவி மக்களைக்கூட அநேகர் கொன்றதாக நாம் பத்திரிகைகளில் படித்திருக்கின்றோம். குடிப்பவன் தன் மனைவி மக்களையே கொல்வானென்றால் அவன் வேறு என்னதான் செய்யமாட்டான்? ஒருவன் செல்வத்திற் சிறந்த சீமானாயினும் அவன் குடிக்கக் கற்றுக்கொள்வானாயின் அப்பொழுதே இலட்சுமி அவனை விட்டு நீங்குவாள் என்பது திண்ணம். இவ்வளவும் தெரிந்துகொண்டு பின்னும் குடிக்கப் புகும் மனிதர்களை என்னவென்று சொல்வது?—பரிதாபம்!

சூதாடுதல்: இவ் விஷயத்தைப்பற்றி நாம் அதிகமாக யாதும் சொல்லவேண்டிய அவசியமில்லை. பாரத சரித்திரத்திற்குக் காரணமாயிருந்தது எது? சூதல்லவா? பாண்டவர்கள் காட்டுக்குப் போவதற்குக் காரணமாயிருந்தது எது? சூதல்லவா? நளச்சக்கரவர்த்தி, தன் மனைவி மக்களைவிட்டுப் பிரிந்து தன்னை வணங்கினவனைத் தான் வணங்கி நிற்பதற்கு முதன்மையாய் இருந்தது எது? சூதல்லவா? சூது துர்க்குணங்கள் எல்லாவற்றிற்கும் இருப்பிடமாகும். சூதாடுகிறவனிடத்தில் தருமங் கெட்டு அதர்மந்தோன்றும். அவனுக்கு நியாயாநியாயந் தெரியாது. அவன் வெகு சீக்கிரத்தில் எல்லோருக்கும் பொல்லாதவனாவான். சூது

தோற்றவனையும் விடாது; ஜயித்தவனையும் விடாது. தோற்றவன், தோற்றுவிட்டப் பணத்தை மீண்டும் பெற வேண்டுமென்று சூதாடப்போகிறான்; ஜயித்தவனோ பின்னும் ஜயிப்போ மென்னும் எண்ணத்துடன் சூதாடத் துணிகின்றான். ஆகையால் சூதில் மனத்தைச் செலுத்துவது இறுதியில் துன்பத்தையே தரும். சூதாடுவதில் ஒருவன் எவ்வளவு கெட்டிக்காரனா யிருப்பினும் கடைசியில் அவன் துன்பப்படுவா னென்பது திண்ணம். ஆகையால் அறிவுடைய பெரியோர்கள் எப்போதும் சூதை விரும்பமாட்டார்கள். மலையளவு திரவியத்தை யுடையவனாயினும் அவன் சூதாடும் பழக்கத்தைக் கைக்கொள்ளுவானாயின் அவன் செல்வ மெல்லாம் இருந்தவிடந் தெரியாமற் போய் விடும் என்பது திண்ணம். சில மாதங்களுக்கு முன் பம்பாயில் குதிரைவண்டி யோட்டுகிறவன் ஒருவன் அங்கு நடைபெற்ற குதிரைப் பந்தயத்திற்குப் போகவெண்ணி அங்குப் போனால், அதிக லாபம் வருமென்று சொல்லித் தன் மனைவியினிடமிருந்து அவளுடைய நகையை வாங்கிக்கொண்டு போய் அடகுவைத்து நூறு ரூபா வாங்கிச் சென்று, குதிரைப் பந்தயத்தில் தோற்றுவிட்டான். கணவன் பெரும் பொருளோடு வருவா னென்று எண்ணியிருந்த பேதையாகிய அவனுடைய மனைவி, கணவன் வெறுங்கையனாக வந்தமை கண்டு, அவனை வம்புபேசி வெறுத்தாள். உடனே அவள் கணவன் கோபங்கொண்டு அவளை அடித்தான். அடி பலமாக அவள் பொறியிற்படவே அவள் இறந்தாள். அப்போது பக்கத்திலிருந்த அவனுடைய பிள்ளை நடந்த சம்பவத்தைக் கண்டு அலறினான். உடனே குதிரை வண்டி யோட்டுகிறவன் தன் மகன் வெளியிற் சென்று உண்மையைச் சொல்லிவிடுவா னெனப் பயந்து அவனைக் கொன்றுவிட்டான். பின்னர் அவன் தான்செய்த காரி

யத்தையெல்லாம் எண்ணி எண்ணி யேங்கினான். அவனுக்குத் தன் உயிரின்மீதும் வெறுப்பு உண்டாயிற்று. அதனால், அவன் போலீஸ்காரர்களிடம் சென்று தான் செய்த குற்றத்தைக் கூறினான். போலீஸ்காரர்கள் விலங்கிட்டு அவனைத் தங்கள் வசப்படுத்திவிட்டார்கள். பார்த்தீர்களா சூதின் சுகத்தை! நாம் மேற்கூறிய விஷயம் சில மாதங்களுக்கு முன் சென்னையில் நடைபெறும், 'டெய்லி எக்ஸ் பிரஸ்' பத்திரிகையில் வெளிவந்ததாகும். இப்படியே வருஷா வருஷம் சென்னைக்குச் சமீபத்தில் உள்ள கிண்டியில் நடைபெறும் குதிரைப் பந்தயத்திற்கு அநேகர் சென்று பாழாகின்றனர். சூதாட்டத்திற்குச் செல்லும்போது ஒருவனுக்கு இருக்கின்ற சந்தோஷம் திரும்பி வரும்போது இருப்பதில்லை. எப்படியிருக்கும்? சூதாடுகிறவன் முகத்தில் எப்போதும் இலட்சுமி களையே இராது. சூதாடியினுடைய முகமும், கொலையாளியினுடைய முகமும் ஒரே விதமாகத்தானிருக்கு மென்பது திண்ணம். எப்படிப் பார்த்தாலும் சூது தீமையையே விளைவிக்குமாகையால் அதைப்பற்றி நினைப்பதுங் கூடாதென் றுணர்வோமாக.

பிறர் மனைவியை இச்சித்தல்: இச்செய்கை எல்லாவற்றினுங் கொடியதாகும். பிறர் மனைவியை இச்சிக்கின்றவனுக்கு இவ்வுலகத்திலும், மறுவுலகத்திலும் நல்வாழ்வு கிட்டாது. பிறர் மனைவியை ஒருவன் இச்சிக்கும்போது அவன், 'நம் மனைவியை வேறு ஒருவன் இச்சிப்பானாயின் அப்போது நமக்கு எப்படியிருக்கும்' என்று எண்ணிப் பார்க்கவேண்டும். 'நமது மனைவி பதிவிரதை யாகையால் அவளைப்பற்றிக் கவலையில்லை. நாம் எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம்' என்று சில பேதைகள் நினைக்கின்றனர். 'என்ன செய்கிறது? சந்தர்ப்பம் அப்படியிருந்தது. அவளே என்னை விரும்பினாள். நான் என்ன செய்வேன்?' என்று

கூறுகின்ற பேதைகள் எத்தனையோ பேர் இருக்கின்றனர். அப்படிக் கூறுகின்றவர்கள், 'நமது மனைவி இன்னொருவனை வலிந்தழைத்தால், அவள் விருப்பத்திற்கு அவன் இஷ்டப் படுவதா வேண்டாமா' என்று எண்ணிப் பார்க்கட்டும். அப்போது எல்லாம் விளங்கிவிடும். நம்முடைய மனைவிமார் ஒழுக்கமுடையவர்களா யிருக்கவேண்டு மென்று நாம் விரும்புவதைப் போலவே மற்றவனும் தன் மனைவி ஒழுக்க முடையவளா யிருக்கவேண்டு மென்று விரும்புவா னென்று நமக்குத் தெரியாம விருப்பதற்குக் காரண மென்ன? அறியாமையோ? கேடுகாலமோ? நாம் அறியோம். உலகத்தாருக்குப் பல அரும்பெருந் தத்துவங்களை எடுத்து உபதேசிக்க முன் வருகிறவர்கள்கூட இவ்விஷயத்தில் தவறு கிறார்க ளென்பதை அறியும்போது நம் மனம் புண்படுகின் றது. உலகம் கெட்டது. நண்ப னென்றும், ஞானி என்றும் எண்ண வழியில்லை. பெண் என்றால் எவனும் பல்லைக் காட்டுகிறான். என்ன அறியாமை! கற்றவர்களும் இப்படித் தான் என்றால் மற்றவர்களைப்பற்றி என்ன சொல்வது? தன் மனைவி பிற புருஷரை விரும்பக் கூடா தென்று கருது கிறவர்க ளெல்லோரும், பிறர் மனைவியர்களின் மீது தங்கள் கண்ணோட்டத்தைச் செலுத்தாதிருக்க வேண்டும். பிறர் மனைவியை இச்சிக்கிறவனை எவனும் மதிக்கமாட்டான். உடன் பிறந்த சகோதரனும் அவனைத் தாராளமாகத் தன் வீட்டிற் சேர்க்க அஞ்சுவா னென்றால், மற்றவர்கள் அவனை எவ்வாறு நடத்துவார்க ளென்பதைப்பற்றிக் கேட்பா னேன்! பிறன் மனையாளை விரும்புகிறவனிடத்தில் வேறு எவ்வித நற்குணங்கள் இருப்பினும் அவைகள் பிரயோசனப் படமாட்டா வென்பது திண்ணம். இக்காலத்திலும், முற் காலத்திலும் பிறர் மனைவியை இச்சித்தவன் எவனும் சுகமடைந்ததில்லை. இதற்குப் பல சரித்திரங்கள் ஆதாரமா

யிருக்கின்றன. பிறர் மனைவியை இச்சிப்பது எவ்வகையி லும் துன்பத்தையே தரும். சில சமயங்களில் பிறர் மனைவியை இச்சிப்பது நன்மைக்கிடமாகவும், இன்பமாகவுந் தோன்றினும், அந்நன்மையும், இன்பமும் வெகு விரைவில் சூரியனைக் கண்ட பனிபோல் மறையும் என்பதிற் சந்தேக மில்லை. அனுபவமுடையவர்கள் நான் சொல்வதை, 'ஆம்' என்று அங்கீகாரம் செய்து கொள்ளுவார்கள் என்பது திண்ணம். ஆகையால் பிறர் மனைவியை இச்சித்துப் பெரும் பழிக்கும், பெரும் பாவத்திற்கும் எவரும் ஆளாகாமல் இருப்பார்களாக.

தாசிகளை நாடிச் செல்லுதல்: இவ்வழக்கம் இக்காலத்தில் எல்லோருக்கும் சர்வ சாதாரணமா யிருக்கிறது. ஊராரைப் பல வழிகளிலும் மோசம் செய்து தங்களைப் பெரிய மனிதர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்களிற் சிலர் தாசியை வைத்துக் கொள்ளுவது கௌரவ மென்று கருதி, தாங்கள் கருதியபடியே செய்தும் வருகின்றனர். அத்தாசிகள் தங்களுடைய அளவு கடந்த சாமர்த்தியத் தினால் இவர்களை மயக்கி இவர்களிடமிருந்து பொருள் பறித்துப் பின்னர், தங்களுக்கு இஷ்டமானவர்களோடு கூடிக் களிக்கின்றனர். இதை யறியாத இத் தனவந்தர்கள் அத்தாசிகள் தங்கள் மீது வெகு பிரியங் கொண்டிருப்பதாக நினைத்துக்கொண்டு அத்தாசிகளின் இஷ்டப்படி யெல்லாம் நடக்கத் துணிகின்றனர். திருவண்ணாமலையில் ஸ்ரீ முருகக் கடவுளின் வரப்பிரசாதியாய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிச் செய்த திருப்புகழ் என்னும் அரிய நூலில் சுவாமிகள் தாசிகளின் இழிவைப் பற்றி எடுத்துக் கூறியிருப்பதைப்போல் வேறு யார் நமக்கு எடுத்துக் கூறப்போகிறார்கள்? அவர் அறியாத தொன்று மில்லை. அம்மகான் தாசிகளைப் பற்றிக் கேவலமாகப்

பேசுவதைத் தவிர, உயர்வாக ஒரு வார்த்தை யாவது சொல்லி யிருக்கின்றாரா? இல்லை, இல்லை. தாசிகள் எவ்வகையினும் கொடியவர்கள் என்பதை அவர் எடுத்துக் கூறியிருந்தும் நாம் அத்தாசிகளை விரும்புவது கொடுமையல்லவா? வாசனையுள்ள மல்லிகைப் பூவைவிட வாசனையில்லாத வாடா மல்லிகை மிகவும் அழகாகத்தான் இருக்கின்றது. ஆயினும் மல்லிகை யாகுமோ வாடா மல்லிகை? ஒரு போது மாகாது. நமது மனைவியரை விடத் தாசிகள் எவ்வளவு அழகுடையவர்களாயிருந்தாலும், பேச்சுக் கற்றவர்களாயிருந்தாலும், சாகசமுடையவர்களாயிருந்தாலும் அவர்கள் நமது மனைவியருக்கு இணையாக மாட்டார்கள். கற்புடைய ஒரு மனைவியினால் கணவன் அடையும் நன்மை அதிகமாகும். தாசிகளால் நன்மை யடைய விரும்புவதும், கடலிலெறிந்த பொருளை மீண்டும் அடைவோ மென் றெண்ணுவதும் ஒன்றேயாம். அட்டையானது இரத்தத்தை உறிஞ்சுவது போலவே தாசிகள் தங்களிடம் வருகிறவர்களுடைய செல்வத்தைக் கிரகிப்பதிலேயே கருத்துடையவர்களாயிருப்பார்கள். எவ்வளவுக் கெவ்வளவு ஒருவன் பொருளை அதிகமாகத் தருகின்றானோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக அவர்கள் அவனை விரும்புவது போல் நடிப்பார்கள். எவரிடத்திலும் அவர்களுக்கு உள்ளன்பு கிடையாது. 'இவர் தெரியாது எழுதுகிறார். எத்தனையோ தாசிகள் அன்புடையவர்களாய் இருக்கின்றார்கள்' என்று சிலர் எண்ணலாம். அப்படி எவரேனும் எண்ணினால், 'அவர்களுக்கு அனுபவம் போதாது; அல்லது அவர்கள் இவ்விஷயத்தை நன்றாகக் கவனிக்கவில்லை' என்று நாம் கூறுவோம். தாசிகள் வரன் முறை பார்ப்பதுங் கிடையாது. தகப்பன், பிள்ளை என்னும் முறை பார்க்கும் தாசி ஒருத்தி இருப்பாளானால், அவள் தன் சுயநலங் கருதி ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டே

அவ்வாறு இருக்கின்றாள் என்று நான் கூறுகிறேன். 'அப்பன் வருவான், அதன் பின்னர் மகன் வருவான், தப்பு முறை என்று தள்ளாதே' என்னும் மகா மந்திரம் ஒவ்வொரு தாசிகளின் மனத்திலுங் குடிகொண்டிருக்கின்றது. அவர்கள், முதல்நாள் தங்களுக்குப் பெரும் பொருள் கொடுத்தவன் மறுநாள் தங்களிடம் வருவானாயின், அப்போது அவனிடத்தில் பணம் இல்லையென்று தெரிந்து கொண்டால், அவனை முன்பின் அறியாதவர்களைப்போல் நடிக்க ஆரம்பிப்பார்கள். அல்லது, 'உங்களைப் பற்றித்தான் சதா நினைத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் வந்தது எனக்கு நல்ல வேளையாயிற்று. ஆனால்—ஆனால்—' என்று கூறி, 'தலைவலி வயிற்றுவலி' என்று ஏதாவது பொய் சொல்லி வந்தவனைத் திரும்பிப் போகச் செய்வார்கள். சிலர் கூறுவது போல் ஆயிரத்தில் ஒரு தாசி நல்லவளாயிருக்கலாம். இருந்தாலென்ன? எந்தத் தாசியாயினும் சரியே! தாசிகளில் பணத்தில் கருத்தில்லாதவள் எவளும் இருக்க மாட்டாள். சென்னபட்டினம் போன்ற பிரபலமான இடங்களில் வரவரத் தாசிகளின் தொகை அதிகப்படுகின்றன. அதனால் கெடும் குடித்தனங்கள் அநேகம். அரசாங்கத்தார் இவ்விஷயத்தைக் கவனித்துத் தாசிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முயல்வது நலமாகும். அரசாங்கத்தார் இவ்விஷயங்களைக் கவனிக்க வேண்டுமென்று பல பெரிய மனிதர்கள் கேட்டுக் கொண்டால் நலமாயிருக்கும். பெரிய மனிதர்கள் ஏன் கேட்கப் போகிறார்கள்! அவர்களிற் பலர் வாசம் செய்வது தாசி வீடாகிய திருமாளிகை அல்லவோ? எவரேனும் எக்கேடேனுங் கெட்டுப் போகட்டும். கெட்ட பின்னராவது புத்தி வாராமலா போகும்? கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்வதால் என்ன பிரயோசனம் உண்டாகப் போகிறது? தாசிகளின் சாகசத்தையும், அவர்

கள் எப்படி அறிவற்றவர்களை மயக்குகிறார்களென்பதையும், அவர்களிடத்தில் ஏன் அநேகர் மயங்கிக் கிடக்கின்றார்களென்பதையும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் அதற்குத் தனியே ஒரு புத்தகம் எழுதவேண்டும்.

சகோதரர்களே, தாசிகளின் சேர்க்கை எவ்வகையிலும் துன்பத்தையே தரும். 'மைவிழியார் மனையகல்' என்னும் ஆன்றோர் வாக்கை நாம் இங்குக் கவனித்தல் அவசியமாகும்.

சகோதரர்களே! பொய் பேசுதல், பாரபட்சமாக நியாயம் சொல்லுதல் முதலிய பல துர்க்குணங்கள் நம்மை விட்டு ஒழியவேண்டும். நாம் எல்லோரிடத்திலும் நல்லவர்களாக நடந்து கொள்ளவேண்டும். அவ்வாறு நாம் நடந்து கொண்டால் உலகத்தார் நம்மைக் கொண்டாடுவார்கள். நமக்கு நல்வாழ்வும், புகழும் உண்டாகும். கடவுள் நம்மிடத்தில் கருணை கொள்ளுவார்.

சகோதரர்களே! இதுவரையில் ஒருவாறு நாம் கணவனின் கடமை என்னும் தலைப்பின் கீழ்க் கூறிவந்த விஷயங்களால் உலகத்திற்கு ஒரு சிறிதேனும் நன்மையுண்டாகுமானால் அதுவே நமக்குப் பேரானந்தம் என்பதோடு நாம் எல்லாம் வல்ல இறைவன் அருளால் இவ்வியாசத்தை முடிக்கின்றோம்.

முற்றிற்று.

P. R. RAMA IYAR AND CO., PRINTERS, MADRAS

புதியதாக வெளிவந்த நாவல்

மாணிக்கவல்லி

அல்லது

ஒரு மாதின் மர்மம்

இது நவரசங்கள் பொருந்திய ஒரு செந்தமிழ் நாவல். இது வாசிப்பவர்களுக்கு அருவருப்பையே உண்டாக்காத ஒரு நவீன நாவல். இது எத்தனை தடவை படித்தாலும் திகட்டவே திகட்டாது. இது சிங்கார ரசமாயும், படிப்பவர் மனதிற்கு மிக்க உற்சாகத்தைக் கொடுக்கும் தன்மையதாயு முள்ளது. இந்த நாவலில் கதாநாயகியாக வரும் மாணிக்கவல்லி என்னும் ஓர் அழகிய பெண்ணானவள், ஓர் நாடக சாலையில் சேர்ந்து பல நாடக விஷயங்களில் பிரக்யாதி பெற்றவளாயும், ஆடல் பாடல் முதலிய விஷயத்தில் நற்கியாதி பெற்றவளாயும், இம்மாதின் ஆடல் பாடல் கேட்க வரும் பிரபுக்களுக்கு மிக்க ஆநந்தத்தைத் தருவதும், அவளுடைய சௌந்தரியத்துக்கும் நடை நொடி பாவனைக்கும் மெச்சி நாடகம் பார்க்கவரும் பிரபுக்கள், ஒருவருக்கொருவர் தெரியாமல் இம் மாணிக்கவல்லியின் மீது காதல் கொள்வதும், அவளால் வெறுத்துத் தள்ளப்பட்ட ஒருவன் செய்யும் சூதும், கதாநாயகி மாணிக்கவல்லியின் விசனமும், அவளைக் காதலிக்கும் புருஷர்களின் தந்திரமும் படிக்கப் படிக்க இனிமையாக இருக்கும். இக்கதையை வாசிக்கும் சகோதர சகோதரிகளுக்கும், ஓர் நாடகத்தையே நேரில் பார்த்ததைப்போலத் தெரியவரும். இப்புத்தகத்தின் விலை ரூபாய் 1—0—0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

தி. இராஜகோபால் முதலியார்,

நெ. 259, தங்கசாலை வீதி,

சென்னை.

நண்பர் இருவருக்குள் நடந்த சம்பாஷணை

தனநாதன் :—கோபாலா! நீ என் இவ்வாறு முகவாட்டத்துடன் உட்கார்ந்துகொண் டிருக்கின்றாய்?

கோபாலன் :—அதை என் கேட்கின்றாய்? வரவரக் கடன் அதிகமாகின்றது. கையிலோ பொருளில்லை. வேலை செய்து பிழைப்போமென்றாலும் அதற்கும் வழியில்லை.

தனநாதன் :—என் வழியில்லை என்று சொல்லுகிறாய்?

கோபாலன் :—என் விதியை என்னவென்று சொல்வது? சிறுவயதில் நான் பள்ளிக்கூடம் ஒழுங்காகப் போவதே கிடையாது. அஃது உனக்குத் தெரியும். அப்போது என் தகப்பனாரும் என்னைக் கவனியாமல் விட்டு விட்டார். என் தாயாரும், 'நமக்கு வேண்டிய அளவுக்குச் சொத்து இருக்கின்றது. பிள்ளை படியாவிட்டா லென்ன?' என்று சொல்லி என்னைச் செல்வமாக வளர்த்து விட்டார்கள். கடைசியாக என் தகப்பனார் இறந்துபோகும்போது சாய வியாபாரத்தில் அதிக நஷ்டமடைந்து விட்டார். அதனால் எங்கள் சொத்துக்க ளெல்லாம் போய்விட்டன. அதே கவலையால் என் தகப்பனாரும், தாயாரும் இறந்துபோயினர். பிறகு நான் கொஞ்சகாலம் ஒரு மாதிரியாகக் காலந் தள்ளிவந்தேன். இனி வேலை செய்தால்தான் சாப்பிடலாம். இல்லாவிட்டால் பட்டினிதான்! எனக்கோ இங்கிலீஷில் ஒரு வரியாவது எழுதவும் தெரியாது; படிக்கவுந் தெரியாது. எங்குப் போனாலும், 'உனக்கு இங்கிலீஷ் தெரியுமா?' என்று கேட்கிறார்கள். கொஞ்சமாவது இங்கிலீஷ் தெரியுமானால் எதாவது ஒரு வேலை கிடைக்கும்போல் தெரிகிறது. அதற்குத்தான் என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண் டிருக்கின்றேன்.

தனநாதன் :—இதற்கென்ன யோசனை வந்தது! உபாத்தியாயர் இல்லாமலே இங்கிலீஷ் கற்றுக்கொள்ள சில புஸ்தகங்கள் தற்

சமயம் வெளிவந்திருக்கின்றன. அவைகளிற் சிறந்தது, 'ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி' என்பதாகும் அப் புஸ்தகத்தை நீ வாங்கிப் படிப்பாயானல் மிகச் சீக்கிரத்தில் நீ இங்கிலீஷில் கெட்டிக்கார னுவாய். நான் அந்தப் புஸ்தகத்தைப் படித்துத்தான் இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்து, பாரி அண்டு கம்பனியில், முப்பது ரூபா சம்பாதிக்கின்றேன்.

கோபாலன் :—ஓ, அப்படியா. அந்தப் புஸ்தகத்தின் விலை என்ன ?

தனநாதன் :—இரண்டு ரூபாதான். அதிகமில்லை.

கோபாலன் :—பரவாயில்லை. அஃது எங்கே கிடைக்கும்?

தனநாதன்:—"T. இராஜகோபால் முதலியார், 259, தங்க சாலை வீதி, சென்னை" என்னும் விலாசத்திற்கு எழுதினுல் கிடைக்கும்.

கோபாலன் :—நண்பனே, நான் இன்றைக்கு விழித்த முகம் நல்ல முகம்போ லிருக்கின்றது. நீ நல்ல சமாசாரம் சொன்னுய். அதற்காக நான் உனக்கு வந்தனம் செய்கிறேன். இப்பொழுதே எழுதி, 'ஆங்கில ஆசான்' என்னும் அந்தப் புஸ்தகத்தை வரவழைக்கின்றேன்.

தனநாதன் :—சரி; அப்படியே செய். நான் போய் வருகிறேன்.

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !!

வெகு நாட்களாய் எதிர்பார்த்திருந்த

ரதி மன்மதா காமதகன காக்ஷி யென்னும்

நவீன நவரத்ன ஒப்பாரி

அன்பர்காள்! இப் புத்தகம், வெகு புது மாதிரியாவும், மெச்சத் தக்கதாகவும், காமன் பண்டிகைகளுக்கும், எரிந்த கட்சி, எரியாத கட்சி சவால் பாடுபவர்கட்கும், டேப் முதலிய கருவிகள் வைத்து பாடுவதற்கும், பெண்கள் தமது பந்துக்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி பாட பல ஒப்பாரிகளும், ரதி மன்மத ஒப்பாரிகளும் சேர்த்து நல்ல கடிதத்தில் அச்சிடப் பட்டுள்ளது.

குறிப்பு:—'நவீன நவரத்ன ஒப்பாரி' என்பதை பார்த்து வாங்கவும். விலை அணா 5.

எமகாதகன்

அல்லது

மாயா சித்தன்

நண்பர்காள்! இப் பெயரைக் கேட்டதும் உங்களுக்கு வியப்பைத் தரும். அப்படியே, இப் புத்தக முழுவதும் வியப்பைத் தரும்படியான மஹா ஆச்சர்யமும், சாமர்த்தியமும், தந்திரங்களும் நிரம்பி இருக்கின்றன. எமகாதக னென்ற கதா நாயகன், தன் பெயருக்குத் தக்கபடி, எப்பேர்ப்பட்ட சாமர்த்தியக்காரர்களையும் ஏமாற்றி, அரசாங்கத்தாராலும் பிடிபட முடியாமல் வெகு சாமர்த்தியமான வேலைகள் செய்கிறான். புஸ்தகம் முழுவது மிருக்கும் தந்திர யுக்திகளையும், எமகாதகனால் ஏமாந்து போனவர்களையும் படித்தால், உடல் குலுங்கும்படி சிரிப்பு உண்டாகும். இதை முற்றிலும் படித்து முடிக்காமல் புத்தகத்தைக் கீழ் வைக்க மனம் வாராது. இதைப் போன்ற அருமையான புத்தகம் இதுவரை வந்ததே இல்லை. விலை 0 8 0

உடனே அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,

259, தங்கசாலை தெரு,

[illegible]ட் பில்டிங் போஸ்ட், மதராஸ்.

☞ எமது லேடி டிரேட் மார்க் பிளாக் போட்டிருக்கும் "ஆங்கில ஆசான்" அல்லது "ஆங்கில போதினி" யைப் பார்த்து வாங்குங்கள்.

கொஞ்சம் பிரதிகளே இருக்கின்றன. ஆர்டருக்கு முந்துங்கள்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ள புதுமாதிரியாக சுலபமான தமிழில் வெளியிடப்பட்டிருக்கிறது.

குறைந்த விலை! நான்காவது பதிப்பு. பெருத்த விஷயம்!!

ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் தெரிந்துகொள்ளலாம்.

உபாத்தியாயர் இல்லாமல் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் இங்கிலீஷ் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, கருமாதி, நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் இங்கிலீஷ் அர்த்தமும் வெகு சுளுவான நடையில் விளக்கப்பட் டிருக்கின்றன. மாதர்களுக்கும் வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

இப்புஸ்தகம் 1-க்கு விலை ரூபா 2.
தபால் செலவு அணா 8.

பினாங்கு சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்தர் செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோ
259, தங்கசாலை தெரு, மின்